1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு ஆவணி மாதம் 23-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 33-ம் இலக்கம்





## பரிசுத்த அடைக்கலமாதா கோவில்

யாழ்ப்பாணம், பரிசுத்த அடைக்கல மாதாகோவில் திருநாளாகிய கன்னி சுத்த தேவதாயார் பிறந்தபெருநாள் வருகிற புரட்டாசிமாதம் 8-ந்திகதியன்று வழமையான ஆரம்பநோவனைகளுடன் கொண்டாடப்படும். வண. யோசெவ் இராசகாரியர் சுவாமியவர்கள் நோவனைப் பிரசங்கங்கள் செய்வார். திருநாளன்றுகாலை 8மணிக்குப் பெரிய பாடற்பூசையுடனும், சாயந்தரம் வேஸ்பர், திருச்சுரூப சுற்றுப்பிரகாரம், திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்தோடும் திருநாள் முடிவாகும்.

## அரசாங்கஊழியர் இளைப்பாறும்வயது

அரசாங்க உத்தியோகஸ்தர்களின் இளைப்பாறும்வயதுபற்றிச் சென்ற செவ்வாய்க்கிழமைகூடிய சனப்பிரதிநிதிகள்சபைக் கூட்டத்திலே டக்றர் கொல்வின் ஆர். டி சில்வாகேட்ட ஓர் கேள்விக்கு நிதிமந்திரி பதில்அளித்தபோது, அரசாங்க உத்தியோகஸ்தர்கள் 55 வயது பூர்த்தியானபின்னரும் அனுமதிபெறுமலே தொடர்ந்து வேலைசெய்யலாமெனக் குறிப்பிட்டு, இவ்வருடம் ஆடிமாதம் 19-ந்திகதியன்று அனுப்பப்பட்ட சுற்றறிக்கை நடைமுறைக்குவாராது பிந்த நிறுத்தப்பட்டதாகவும், அரசாங்கஉத்தியோகஸ்தர்கள் இளைப்பாறுவதற்கான விதிகள் இப்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

## சமஷ்டிக்கட்சியும் இராஜரத்னவும்

"சிங்களவர்களை அழித்துவிடுவான் முனைந்துநிற்கும் சமஷ்டிவாதிகளிடமிருந்து சிங்களச்சாதியைப் பாதுகாக்கும்படியாகவே நான் மக்கள் ஐக்கிய முன்னணி (எம். ஈ. பி.) அரசாங்கக்கட்சியிலிருந்து இப்போது விலகிக்கொண்டேன்" என்று உதவிமந்திரி பதவியிலிருந்தும், அரசாங்க கட்சியிலிருந்தும் இராசினாமாச்செய்து விலகிக்கொண்டவரான வெலிமடை எம். பி. திரு. கே. எம். பி. இராஜரத்ன சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பு நகர மண்டபத்தில் நடந்தேறிய பிக்கு மகா பல மண்டலயத்தின் கூட்டத்தில் கூறியிருக்கின்றார். மேலும் அவர் பேசியதாவது: "சிங்களச்சாதியின் பாதுகாப்பும், வருங்கால சுபீட்சமும் திரு. பண்டாரநாயகாவினதும், அவருடைய அரசாங்கத்தினதும் கைகளில் விடப்படக்கூடாது; நாட்டினைப் பிரிப்பதற்காகச் சமஷ்டிவாதிகள் செய்துவரும் இயக்கங்களை எதிர்த்துநிற்கும் படியாகச் சிங்களவர்கள் தங்கள் வேற்றுமைகளை ஒழித்துவிட்டுத் தங்களுள் ஒன்றுதிரள்வதற்கு இதுதான் தகுந்தகாலம்; கள்ளக்குடியேற்றமே இன்றுள்ளமிகப் பெரும் பிரச்சினையாகும்; இலங்கைக்கு வருமாறு கள்ளக்குடியேற்றகாரரைச் சமஷ்டிவாதிகள் ஊக்கப்படுத்திவருகின்றார்கள்; தங்களைச் சிதைத்துவிடுமாறு சமஷ்டிவாதிகள் போராட்டந்தொடங்கியபோதே தாங்கள் தப்பித்துக்கொள்ளத்தக்கதாய்ச் சிங்களச் சகோதரர்கள் மத்தியிலே ஐக்கிய சுப செய்தியைப் பரப்புமாறு இங்கு சமுகமாயிருப்பவர்களுக்கு மனுப்பண்ணிக்கொள்ளுகிறேன்" என்பதே — அதன்மேல் (1) சமஷ்டிக்கட்சிக்குத் தடைவிதிக்கவேண்டும். (2) மட்டக்களப்பில் டொற்றி சில்வா என்ற பெண்பிள்ளை கொலைசெய்யப்பட்டதையிட்டு விசாரணைநடத்த அரசாங்கம் ஒரு கம்மிஷனை நியமிக்கவேண்டும். (3) இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் திருப்பியனுப்பப்படவேண்டும். (4) இலங்கை இராணுவபலம் 20,000 பேராக அதிகமாக்கப் படவேண்டுமென ஏகமனதாகநிறைவேற்றப்பட்ட நான்கு பிரேரணைகளையும்பிரதமருக்குஅனுப்பிவைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## இராசினாமாச்செய்யக் கோரிக்கை

பிரதமரைத் தலைவராகக்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பதுளைக்கிளை நிர்வாகசபையின் அவசரகூட்டம் ஒன்று சென்ற 15-ந்திகதி நடந்தேறியது. அதிலே முன்னைநாள் தபால்—வானொலி உதவிமந்திரியான திரு. கே. எம் பி. இராஜரத்ன பாராளுமன்றத்திலே தனது வெலிமடை, எம். பி. ஸ்தானத்தை உடனடியாக இராசினாமாச்செய்துவிட்டு, மீண்டும் தேர்தலில் போட்டியிடுமாறு கேட்டுக்கொள்ளும் பிரேரணை ஒன்று நிறைவேறியுள்ளது. அக்கூட்டத்துக்குத் திரு. ஜி. பி மாட்டின் சில்வா தலைமைவகித்துப் பேசியபோது: திரு. இராஜரத்னமட்டிலே பிரதமர் எடுத்துக்கொண்ட நடவடிக்கையானது அரசாங்கத்தின் கௌரவத்தை உயர்த்தியுள்ளது; சமஷ்டிக் கட்சியின்மகாநாட்டைத் தடைசெய்யவேண்டுமென்ற அவரின் கோரிக்கை ஜனநாயககொள்கைக்கு முரணானதென்பதை நியாயமுள்ளவருமே ஒப்புக்கொள்வார்கள்; அவரும், மற்றுஞ் சிலரும் ஒவ்வோர்சந்தர்ப்பத்திலும் கட்சிக்கூட்டத்தில் விவாதித்து ஆராயப்படவேண்டிய விஷயங்களைப்பற்றி அவசர அவசரமாகப் பத்திரிகைகளுக்கும், வெளியிலும் அறிக்கைகள் விடுத்துப் பிரதமருக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்களெனக் கூறலாயினர்.

## அரிசியை நிறுத்துக்கொடுக்க ஏற்பாடு

கொழும்புநகரிலே அரிசியை நிறுத்துக்கொடுப்பது நல்லபலனை அளித்திருப்பதால் இந்தமுறையை வெளியிடங்களிலும் பரீட்சித்துப்பார்க்க உணவு மந்திரி தீர்மானித்திருக்கிறார். அதனால் அரிசியை நிறுத்துக்கொடுப்பதற்கு வேண்டிய தராசுபடிகளை விரைவிலே பெற்றுக்கொள்ளுமாறு நாடெங்குமுள்ள கூட்டுறவுச்சங்கங்களுக்கு அறிவிக்கப்படும்.

## சுதேசப்பொருட்களை ஆதரியுங்கள்

தொண்டைமானாற்றிலே சென்ற 18-ந் திகதியன்று யாழ்ப்பாணக் கலைக்கைப்பணிக் கழகத்தினரின் விற்பனை நிலையத்தை வடபகுதிக் குடிசைக்கைத்தொழில் அதிபர் திரு. எஸ். கந்தவனம் அவர்கள் திறந்துவைத்தார். அவ்வேளை அவர் பேசியவிடத்து: ஒரு நாட்டின் பொருளாதார உயர்ச்சி குடிசைக்கைத்தொழில்களிலேயே அதிகமாகத் தங்கியுள்ளது; குடிசைக்கைத்தொழில்கள் வளமடைவதானது பொதுமக்களிடையே பிறக்கும் உற்சாகத்தையும், சுதேசப்பற்றையுமே பொறுத்ததாகும்; எமது நாட்டுப்பொருட்களையே நாம் உபயோகிப்பதென எல்லோரும் திடசங்கற்பம் செய்துகொண்டால் சகலவிதமான சுதேசதொழில்களும் பெருமளவிலே விருத்தியடையுமெனக் கூறலாயினர்.

## ஏன் இராசினாமாச் செய்தாராம்?

விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்றவாறாய், அரசாங்க கட்சியிலிருந்தும், தபால்—வானொலி உதவிமந்திரி பதவியிலுமிருந்து இராசினாமாச்செய்து விலகிக்கொண்ட திரு. கே. எம். பி. இராஜரத்ன சென்ற 16-ந்திகதியன்று ஓர் கூட்டத்தில் பேசியபோது, தான் அவ்வாறு இராசினாமாச்செய்து விலகியது சரியாஎன்பதை வருங்காலம் நிரூபிக்குமெனக் கூறியிருக்கின்றார். இன்னும் சமஷ்டிக்கட்சியினரின் சதித்திட்டங்களால் நாட்டைஎதிர்த்து நிற்கும் அபாயமும், புத்த கம்மிஷனின் அறிக்கையை இன்றைய அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவரத் தவறியதும், தனிச்சிங்களசட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் அரசாங்கம்காட்டும் அசிரத்தையும், தேர்தல்கால வாக்குறுதிகளின்படி அது நடக்கத்தவறியதுமே தனது இராசினாமாவின் முக்கியகாரணங்களென்று தனதுபழைய பல்லவியையே பாடியிருக்கின்றார். நல்லதும் இவர் திரும்பவும் அரசாங்ககட்சியில் தன்னைச் சேர்க்கும்படிகேட்க முன்வரமாட்டார் என்பதை அவர்கூறும் வருங்காலம் தெரிவிக்குமா என்பதை இருந்து பார்க்கத்தான் வேண்டும்.

## சீன அரிசி இறக்குமதி

செஞ்சீனாவுடன் இலங்கை அரசாங்கம் செய்துகொண்ட றப்பர்—அரிசி ஒப்பந்தப்படி, இவ்வருடத்திலே சீனாவிலிருந்து இலங்கையில் இறக்குமதியாக வேண்டிய அரிசி 2,70,000 தொன். இந்த ஆவணிவரையிலே இதுவரை இலங்கையில் இறக்குமதியான சீன அரிசி 45,000 தொன். அடுத்த புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களிலே மாதந்தோறும் 40,000 தொன் அரிசி சீனாவிலிருந்து இறக்குமதியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பதவிநீங்கிய ஆசிரியர்

சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலே ஓர்உதவிஆசிரியராய் இருந்துவந்த திரு. சி. கதிர்காமநாதன் அவர்களுக்குச் சென்றசனிக்கிழமை ஓர் பிரியாவிடைக் கொண்டாட்டம் நடந்தேறியது. அதிலே அவர் அக்கல்லூரிக்கு விடுத்த பிரியாவிடைச்செய்தியில், "அரசாங்கத்தினிடமிருந்து கிடைத்த ஊக்கக்குறைவும், அனுகூலசாதனங்களின் குறைவுங்காரணமாக ஒருவருடகாலத்துள்தானே நான் ஏமாற்றம் அடைந்துள்ளேன்; அதனால் கொழும்பிலுள்ள ஓர் வங்கியில் சேர்ந்துகொள்வதற்காக நான் மிகுந்த கவலையுடன் மகாகண்ணியம்வாய்ந்த ஆசிரிய பதவியை விட்டுவிலகுகிறேன்; அங்கே எனக்கு இப்போது கிடைக்கும் சம்பளத்தைப்போல மும்மடங்கு சம்பளத்தை நான் பெற்றுக்கொள்ள இயலும்" எனத் தெரிவித்துக்கொண்டார்.

## ஜப்பானியசாமான் இறக்குமதி

ஜப்பானிலிருந்து இலங்கைக்கு ஜப்பானியசாமான்களை ஏற்றுமதிசெய்ய ஜப்பானிய கப்பற்கம்பெனிகள் பல மறுத்துவிட்டனவென்று இங்குள்ள ஜப்பானியசாமான் இறக்குமதியாளருக்கு அவற்றின்ஏசன்றுகள் அறிவித்திருக்கிறார்கள். இவ்விதம் மறுத்துவிட்டகாரணம், ஜப்பானியகப்பல்கள் கொழும்புத்துறைமுகத்தை அடையும் வேளைகளிலே—முக்கியமாகத் தொழிலாளர்தகராறு நிகழுங்காலங்களிலே அவைகள்துறைமுகத்தில் அதிககாலம் தாமதிக்கவேண்டியிருப்பதாகும். இந்தமாதத்திலே இலங்கை இறக்குமதியாளர்கள் ஜப்பானிலிருந்து 1,600 தொன்நிறையுள்ள சாமான்களை எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், இப்போது 40 தொன்சாமான்களை அனுப்பவே இடம்ஒதுக்கப்பட்டுள்ளதென அறிந்துள்ளார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவதாய் எங்கள் தாய்

[சி. எஸ். நாயகம், ஸ்ரேஷன்மாஸ்றர், கெம்பாஸ் — மலாயா]

(முன்தொடர்ச்சி)

ஆம், எங்கள்மாதா இரக்கத்தின் மாதா. இரட்சணியத்தின் மாதா. அன்று பங்குனிமாதம் 25-ந் திகதியன்று நசரேத்தூரின் சிறுகுடிசையிலே கபிரியேல்தேவதூதன் நெற்றி தரையில்பட வணங்கிநின்று, தேவனின் மனுஷாவதாரத்திற்காக அவவின் சம்மதத்தைக் கேட்டபோது, "முடியாது"என ஒரேவார்த்தையில் மறுத்திருந்தால் இன்று எமது கதியென்ன! அவ்வாருயின் எமது இரட்சணியம் எங்கே! ஈடேற்றம் எங்கே! நம்பிக்கைஎங்கே! மோட்சவாழ்வுஎங்கே! இன்றும் என்றும் நாம் பிசாசுக்கு அடிமைகளாயும், நரகத்துக்கு விறகுகளாயும் இருந்திருப்போமே. ஆகவே, அடைபட்டிருந்த மோட்சகபாடம் திறபடுவதற்கு வழிதிறந்துவிட்டது யார்? பாவப்பிணிகண்டு நித்தியமரணத்துக் குள்ளாயிருந்த எம்மை ஞான உயிர்ப்பிச்சைஅளித்துக் காப்பாற்றியது யார்? மாதாவின் சம்மதமின்றிக் கிறீஸ்துநாதர் இந்தமண்ணுலகில் பிறப்பதேது? மாதா இல்லாவிடின் எமக்குக் கிறீஸ்துநாதர்ஏது? கிறீஸ்துநாதர் இல்லாவிடின் இரட்சணியம்ஏது? மோட்சம்ஏது? — நித்தியானந்த வாழ்வு ஏது? அங்ஙனமாயின் இவையெல்லாவற்றிற்கும் காரணமாயிருந்ததுயார்? தேவ அன்னையல்லவா?

அதோ இரத்தவாருய்ச் சிலுவையில்தொங்கும் தேவகுமாரனைப் பாருங்கள்! அவர்யார்? இந்தஅமல தாயின் சொந்தக் குமாரனல்லவா? அவவின் திருஉதரக் கனியல்லவா? அவதான் இந்தக்கனியைப் பூத்துக் காய்த்த மரமல்லவா? சிலுவையில் தொங்கும் திவ்வியகர்த்தர் வடிக்கும் இரத்தமெல்லாம் இந்தவியாகுலத் தாயாரின் — இரட்சணியமாதாவின் இரத்தமல்லவா? அவரின் தசை இந்தமாதாவின் தசையல்லவா? அவரின்என்புகள் இந்தமாதாவின் என்புகள் அல்லவா? சிலுவையில் தொங்கும் அவவுடைய குமாரனின் கோலத்தைப் பாருங்கள்! என்ன கோரகாட்சி! என்ன பரிதாப கோலம்! குருதியில் மூழ்கியவராய் உச்சிதொட்டு உள்ளங்கால்மட்டும் ஏகப்பட்டகாயம். கண்கொண்டு பார்க்கலாமா? கண்கொண்டுநோக்கலாமா? எந்த ஒரு பெற்றதாயும் தன் மகன் இவ்விதம் வதையுண்டு மரணிக்கும் கோரகாட்சியைக் கண்கொண்டு பார்ப்பாளா? பார்த்து மனம்சகிப்பாளா? அப்படியானுல் எம் நிமித்தம் இத்திருத்தாய் பட்டனுபவித்தவியாகுலம் எப்படிப் பட்டதாயிருந்திருக்கும்! அவவின் மனம் என்னபாடுபட்டிருக்கும்! இவ்வாருக எமதுஇரட்சணியத்திற்காக இவற்றையெல்லாம் சகித்த அவவின் தியாகம் எத்தன்மையானது! எந்த ஒருபூலோகமாதா இவ்விதகண்ணருவியான தியாகத்தைப் புரிய முன்வருவாள்!

இன்னும் நாம் முன் கூறியதுபோல், யேசுஎன்னும் திவ்வியகனியைப் பூத்துக்காய்த்தது இந்தக் கன்னிமரியாள்அல்லவா? இந்தஅற்புதமரியாள்அல்லவா? ஓர்மரத்தின் கனி எவ்வளவுதான் தேனமிர்தம்போல் தித்திப்பாயிருந்தாலும், நாம் அந்தக்கனியைப் புகழ்வோமோ, அன்றேல் அந்தமரத்தைப் புகழ்வோமோ? மரத்தைவெறுத்துக் கனியைப்போற்றுவோமோ? அன்றேல் கனியைவெறுத்து மரத்தைப் போற்றுவோமோ? சந்தேகமற இரண்டையுமே போற்றுவோம், புகழ்வோம். இதற்குமாருக மரத்தைவெறுத்துக் கனியை—அன்றேல் கனியைவெறுத்து மரத்தைப் போற்றிப் புகழ்வோமானுல், அப்படிப் பட்டவனை ஓர்முட்டாள் என்றே நியாயமுறைப்படி நினைப்போம். ஆம், இந்தப் பரிசுத்தவதியான கன்னிசுத்த மரியம்மாள் யேசு என்னும் திவ்வியகனியைப் பூத்துக் காய்த்தமையால், நாம் மரமும்பழமுமாகிய தேவஅன்னையையும், அவவின் திருக்குமாரன் கிறீஸ்துவையும் நம்மால் இயன்றமட்டும் இருதய பூர்வமாய்ப் போற்றிப்புகழக் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறேம். யேசுஎன்ருல் நம்மை இரட்சிக்கிறவர். நம்மைஇரட்சிக்கிறவரை நாம் இந்தமாதாமூலமாகவே கண்டோம். இதேபோல் மோட்சத்தை நாம் அடையவேண்டுமானுல் — நம்மை இரட்சிக்கிறவரை நாம்காணவேண்டுமானுல் இந்த அற்புதமரியாள் மூலமாகவே நாம் கண்டடையமுடியும். கண்டடையவேண்டும். இந்த விதிக்குமாருக மோட்சகரைசேர — நம்மை இரட்சிக்கிறவரைக் கண்டானந்திக்க முயல்வதெல்லாம், ஒருவன் தனதுகையால் காற்றைப்பிடிக்க எத்தனிப்பதுபோலாகும்.

இன்னும் திவ்வியகர்த்தர் எம்மைத் தமது "சிநேகிதர்" என்று அழைத்தார் (அரு. 15:15). அவ்வாருயின் நாமும்அவரும் உடலும்உயிரும்போன்ற இணைபிரியாச் சிநேகிதர். "ஒருவன் தன்சிநேகிதர்களுக்காகத் தன்பிராணனைக் கொடுக்கிறதைவிட அதிகமானசிநேகம் எவனிடத்திலுமில்லை" (அரு. 15:13) என்று அவர் சொன்னதுபோல், கிரிகையிலும் நிறைவேற்றி "எங்களுக்காகச் சீவபலியானுர். சிலுவையில் நிஷ்டூரமாக மரணித்தார்!" (அரு. 19:30). நல்லது, எனது நல்வாழ்வுக்காக என்னுடைய பிராண சிநேகிதன் இவ்விதம் தன்உயிரைக் கொடுத்திருந்தால், இந்த அருமையான சிநேகிதனின்மாதாவை நான் எவ்வளவாக நேசிப்பேன். நேசிக்கக் கடமைப்பட்டவனுயிருப்பேன். இதற்குமாருக இந்தப்பிராணசிநேகிதனைப் பெற்றமாதாவை நான் நேசியாவிடில், சங்கியாவிடில், அந்த மாதாவுக்கு மரியாதை காண்பியாவிடில் நான் என்ன மனிதன்? என்னை உலகம் என்னசொல்லும்? மறுபக்கத்தில் ஓர்சிநேகிதன் என்னைத் தனது உயிருக்குயிராகவும், கண்ணுக்குக்கண்ணுகவும் நேசித்துச் சங்கித்து வருகிருனென்று வைத்துக்கொள்வோம். ஆனுல், அவன் என்தாயை — பத்துமாதஞ் சுமந்து பாடுபட்டு என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிவிட்ட என்அருமைத்தாயை அவன் சங்கிப்பதுமில்லை, நேசிப்பதுமில்லை, மதிப்பதுமில்லைஎன்பதை நான் சரிவரக் கண்டறிந்தால், அப்படிப்பட்ட ஓர்சிநேகிதனின் நேசத்தை ஓர்பொருட்டாய் மதிப்பேனே? அவனை ஏறெடுத்தும் பார்ப்பேனே? எனதுநண்பனென்று அவனை அங்கீகரிப்பேனே? எனது வீடுவாசலில் கால்வைக்கத்தானும் விடுவேனே? ஏனெனில், இவ்வித உணர்ச்சி இயற்கையின் அமைப்பு. அவ்வாருயின், யேசுதான்வேண்டும், அவரின்மாதா வேண்டாமென்று அவமட்டில் கசப்புக்கொண்டவர்களாய் அவவைநினையாமல், மதியாமல், சங்கியாமல் அலட்சியமாய் நடப்பது மாத்திரமல்ல, இன்னும் துணிந்து அவவைப்பற்றி உதாசீனமாகக்கதைத்தும் வருகின்ற ஒரு சாரார் இருக்கிருர்களே. இவர்களைப்பற்றி என்னென்போம்! எமது பூலோக மாதாக்கள்மட்டிலே எமது இரத்தத்துடிப்பு இத்தன்மையாமென்ருல், தம்மைப் பத்துமாதம் சுமந்து பெற்றுப் பாலூட்டித் தாலாட்டிக் கண்ணேபோல் பேணிக் காத்துப் போஷித்துப் பராமரித்து வந்த தமது திருமாதாமட்டில் இவ்விதந்துரோகமாய் நடப்பவர்கள்மட்டிலே திவ்வியகர்த்தர் எவ்வாறு நடந்துகொள்வார்? அவர்கள் யேசு, யேசு, கர்த்தர், கர்த்தர் என்று பாராட்டித்துதிக்கும் அந்தயேசு — அந்தத்திவ்வியகர்த்தர் அவர்களை மோட்சவாசற்படியில் கால்வைக்கவிடுவாரா? இதைஅவர்கள் உணரவேண்டும். கனிவேண்டுமானுல் அதைக்காய்க்கும் மரத்தினின்றே அதனைஆயவேண்டும். யேசுஎன்னும்கனி வேண்டுமானுல் மரியாள் என்னும் அக்கனியைக்காய்த்த மரத்தண்டை போதல்வேண்டும். அன்றேல் கனியுமில்லை. மரமுமில்லை. அதாவது, யேசுவுமில்லை. மோட்சமுமில்லை. எனவே, இவ்வித மோட்சவாழ்வுக்கு எமது சந்தோஷத்தின் காரணமாயிருக்கப்பட்ட பரிசுத்தவதியை—எமது இரட்சணியத்தின் மாதாவைக் கையெடுத்து வணங்காதகரம் கரமல்ல. வணங்காதசிரம் சிரமல்ல. போற்ருதவாய் வாயல்ல. புகழாதநா நாவல்ல. மடங்காதகால் காலல்ல.

---

## போளவத்தைத் தபால்

சலாப மேற்றிராசனத்தைச்சேர்ந்த போளவத்தை விசாரணைப் பங்கிலே தேவதாயாரின் மோட்சாரோபணத் திருநாள் இம்மாதம் 15-8-56 புதன்கிழமை பாடற்பூசையுடனும், திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் சிறப்பாக முடிவெய்தியது. அதற்கு முந்த நவதின விழாக்கள் 6-ந் திகதியன்று ஆரம்பமாயின. போளவத்தைத்தமிழ் ஆசிரியரும், ஆசிரியைகளும் ஒன்றுசேர்ந்து வழமைபோல மாலைஆராதனையை இம்முறையும் அதிசிறப்பாக நடத்திவைத்தார்கள். ஆலயத்தின் உள்ளும் புறமும இயற்கை, செயற்கைப் புஷ்பங்களாலும், பலவர்ண மின்சார தீபங்களாலும் சிறந்துவிளங்க, 14-ந் திகதி இரவு 7-30 மணிக்குக் குருப்பிரசாதிகள் எண்மர் மத்தியிலே வண. லெவிற்றேற சுவாமியாரும், வண. வீற் சுவாமியாரும் உதவிபுரிய, அதிவண. பசில் பொண்சேக்கா சுவாமியாரால் மாலையாராதனைபாடித் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டது. அவ்வமயம் இவ்வூர்வாசியான வண. தபறேரு சுவாமியாரால் ஓர் அரிய பிரசங்கம் தமிழில் செய்யப்பட்டது. திருநாளன்று காலை 4-30 மணிமுதல் மூன்று தனிப்பூசைகளும், வண. லோவோ, வண. தபறேருசுவாமிகள் துணைபுரியச் சிங்களஆசிரிய கலாசாலை அதிபரான அதிவண. அன்ரனி சுவாமியாரால் 8-30 மணிக்குத் திருநாட்பூசையும் நிறைவேறின. கட்டளைக்குரவர் வண. கிளமென்ற் சுவாமியாரால் பயிற்றப்பட்டபாடகர்குழாமின் இன்னிசைக் கீதங்கள் திருநாளைச் சிறப்பித்தன. சாயந்தரம் மாதாவின் திருச்சுரூபம் கிராமங்கள்தோறும் பவனி சென்று ஆலயத்தை அடைந்ததும் திருச்சுரூப ஆசீர்வாதமும், தேவநற்கருணை ஆசீர்வாதமும் அருளப்பட்டு, போளவத்தைச் சங்கீதக்கோஷ்டியார் நடித்த "மர்மவீரன்" என்னும் நாடகத்துடனும், மறுநாள் வழங்கப்பட்ட அன்னதானத்துடனும் திருநாள் நிறைவாயிற்று.

— நிருபர்

---

மட்டக்களப்பு

## தாண்டவன்வெளித் தபால்

**பாத்திமாகிரியின் முதல்வருட கொண்டாட்டம்:** தாண்டவன்வெளி, பரிசுத்தவியாகுலமாதா கோவில் மைதானத்திலே பாத்திமாகிரி ஒன்று கடந்தவருடம் அமைக்கப்பட்டது. இந்தக்கிரி அதேவருடம் திரிகோணமலை மேற்றிராணியாண்டவர் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டது என்பதைப் பத்திரிகையிலே நேயர்கள்படித்தறிந்திருப்பார்கள். இதன் முதல் வருடகொண்டாட்டம் எதிரேவரும் புரட்டாசி மாதம் 16-ந் திகதியன்று கொண்டாடப்படும். இத்தினத்துக்கு முந்திய தினங்களில் மாதாவின் நேர்த்திக்கடன் நோவனைகள் நடந்தேறும். அவைகளை நடத்தவிரும்புவோர் இம் மாதமுடிவுக்கு முன் தாண்டவன் வெளிக் கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமியாரிடம் நேரிலோ அல்லது கடிதங்கள்மூலமோ விபரங்களை அறியலாம்.

— நிருபர்

---

● ஜப்பானியதேச ஹிரோஷிமா நகரில் வீசப்பட்ட அணுக்குண்டினுல் பாதிக்கப்பட்ட செல்விமரியா நாகபயாஷி எனும் பெண்பிள்ளை சமீபத்திலே நியூயோக்நகரில் காலஞ் செல்லலாயினுள். இவளின் ஆன்மஇளைப்பாற்றிக்காக ஹிரோஷிமாநகர ஆசனக்கோவிலிலேஓர் துக்கப்பாடற்பூசைநிறைவேறியது. இவர்தான் அடைந்த காயங்களுக்கு நியூயோக்நகரிலே பிளாஸ்றர் சத்திரசிகிச்சை செய்யப்பட்டுவந்தாள்.

* * *

● யேசுசபை ஸ்தாபகரான அர்ச். இஞ்ஞாசியார் பிறந்தவிடமாகிய லொயலாபதிக்குச் சென்ற வைகாசி, ஆனி, ஆடி மாதங்களிலே அணிவகுத்து ஒழுங்குபண்ணப் பட்டனவாய் 542 யாத்திரைகள் நடந்தேறியிருக்கின்றன. இந்தயாத்திரைகளில்கலந்து ஒருலட்சம்பேருக்குமேல் அங்கு சென்றிருக்கிருர்கள். பிறநாடுகளிலிருந்து நடைபெற்றயாத்திரைகள் 33. ஓர்யாத்திரைக்குழு பூர்வீக பிரிவினைச்சபைக் கிறீஸ்தவர்களையே முற்ருக அடக்கியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### செபமாலைப்படையணி உதவியாளர்

வண. பற்றிக்பெய்ற்றன்சுவாமியார் நடத்திவரும் குடும்பசெபமாலைப் படையணியிலே அவருக்குத் துணைச்செய்யும்படியாகத் தென்னமெரிக்காவிலே சிலிநாட்டின் பிரபலஇன்னிசைப் பாடகியான பற்றிசியா கேர்பிஎனும் பெண்மணி ஸ்பானியதேச மதிரித்நகர் சென்றிருக்கின்றாள். இவள் தந்தையாரான திரு. ஜோண் கேர்பிஅவர்கள் சுவாமிகளின் ஞானப்படையணிக்கான ஆயத்தங்களைச்செய்து அவருக்குத் துணைச்செய்யுமாறு ஆறுமாதங்களின் முன்னர்தானே ஸ்பானியதேசம் செல்லலாயினர். மாலுமிசாஸ்திர கம்பெனிஒன்றில் உயர்பதவிவகித்திருந்த இவர் அப்பதவியைக்கைவிட்டுச் செபமாலைப்படையணிக்குத் தமது ஆயுள்முழுவதையும் அர்ப்பணஞ்செய்யத் தீர்மானித்தர்ர்.

### லூர்துபதிப் புதியஆலயம்

இருபதினுயிரம்மக்களைக் கொள்ளக்கூடியதாய் லூர்துதிருப்பதியிலே நிலத்தின்கீழ் கட்டியெழுப்பப்படவிருக்கும் புதிய ஆலயத்தின் முதற்கட்டுவேலையைச் சமீபத்தில் லையன்ஸ் நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஜேர்லியர் ஆண்டவர் ஆசீர்வதித்துத் தொடக்கிவிட்டிருக்கின்றார். அர்ச். பத்தாப்பத்தி நாதருக்கு அர்ப்பணஞ்செய்யப்படவிருக்கும் இந்தஆலயமானது, 1858-ம்ஆண்டு பரிசுத்ததேவதாயார் காட்சியருளிய திருக்கெபியைச் சூழவர இருந்துவருகின்ற கட்டடங்களில் அமைந்துள்ள சிற்பவேலைப்பாடுகளைப் பாதியாவண்ணமே நிலத்தின்கீழ் கட்டப்படுகிறது. இது உலகிலுள்ள மிகப்பாரிய ஆலயங்களுள்ஒன்ருய், ஏறக்குறைய 650 அடி நீளமும், 200 அடிஅகலமுமுள்ளதாயும், பலிபீடத்தை மறைக்கக்கூடிய தூண்கள்அற்றதாயும் இருக்கும். லூர்துதிருப்பதிக் காட்சிகள்அருளப்பெற்ற நூரும்ஆண்டாகிய 1958-ம்ஆண்டிலே இதனைக் கட்டிமுடிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

### கத்தோலிக்கர் துன்புறுத்துகின்றனராம்

கம்யூனிஸ்தஆட்சி நடைபெற்றுவரும் போலாந்திலே இதுவரை கத்தோலிக்கரை இம்சித்துத் துன்புறுத்திவந்த கம்யூனிஸ்தர்கள் இன்று கத்தோலிக்கரே தங்களைத்துன்புறுத்துவதாகத் தங்கள் ஆதிக்கத்திலுள்ள பத்திரிகைகள்மூலம் முறையீடுசெய்யத் தொடங்கியிருக்கிருர்கள். விசேஷமாய் நாஸ்திகர்களே துன்புறுத்தப்பட்டு வருவதாக அங்குபிரசுரமாகும் பல்வேறு பத்திரிகைகளினதும் ஆசிரியர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தெரிவிக்கின்றன. இன்னும் ஆராதனைகளுக்குச் செல்லுமாறு கம்யூனிஸ்த பிள்ளைகள் தூண்டிச் செய்விக்கப்படுகிருர்கள் என்பனவாக அவைகள் முறையீடுசெய்கின்றன. போலிஷ்மக்கள் கம்யூனிஸ்த நாஸ்திகத்தைக்கைக்கொண்டு அதிலே படிந்துவிட்டார்கள்என்றுபொய்ப் பிரசாரஞ்செய்வதே இந்தமுறையீட்டுக்கெல்லாம் காரணமென்று நம்பப்படுகிறது.

### லோயலாவில் குருப்பட்டங்கள்

யேசுசபையை அடியிட்டவரான அர்ச். இஞ்ஞாசியார் பிறந்தவிடமாகிய லொயலாபதியின் மகாலயத்திலே அவர் திருநாளாகிய சென்றஆடிமாதம் 31-ந்திகதியன்று ஜெனேவாநகர் அதிமேற்றிராணியாரான கருதினல் சிறிஆண்டவராலே 51 குருத்துவ மாணவர்கள் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பட்டிருக்கின்றுர்கள். அர்ச். இஞ்ஞாசியாரின் திருநாளினதும், அவர் பரமபதம்அடைந்த 400-ம்ஆண்டு நிறைவு விழாவினதும் ஞாபகார்த்தமாக அங்கு நடைபெற்ற ஈருந்ததிருவைபவங்களில் கருதினல்சிறிஆண்டவர் பாப்பரசரின் பிரதிநிதியாகச் சமுகமளித்திருந்தார். குருப்பட்டம்பெற்றவர்களில் 30 பேரும் யேசுசபைக்குருமார். இந்தமுப்பதுபேரும் மறுநாள் அம்மகாலயத்திலே ஏககாலத்தில் திவ்விய பூசைகள் நிறைவேற்றினுர்கள். இந்தப்பூசைகள் முடிவானதும் கருதினல்ஆண்டவர் ஸ்பானிய அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்அநேகரும், பெருந்திரளான யாத்திரிகர்களும் கூடியிருந்தசமுகத்தில் பெரியபாடற்பூசை நிறைவேற்றினர். பரிசுத்த பிதா இச்சந்தர்ப்பத்தில்லொயலாபதிக்கு வானொலிமூலம் அனுப்பியசெய்தியைக் கேட்பதற்கென்று ஜெனறல்பிருங்கோ அவர்கள் தலைமையில் அங்கு பல்லாயிரக்கணக்கான ஸ்பானியர்கள் குழுமியிருந்தார்கள்.

### பாப்பரசருக்குப் பாடும்புத்தகம்

ஸ்பானியதேச ஆரம்பகல்வித்தியாதரிசிகள்சங்கம் நவீனபாடும்புத்தகம்ஒன்றைப் பாப்பரசருக்கு அன்பளிப்புச் செய்யவிருக்கின்றது. 'அல்பம்'எனப்படும் வெள்ளேட்டுப்புத்தகத்தைத்திறந்ததும் அதுஸ்பானிய பாடசாலைப்பிள்ளைகளின் பாடசாலைக்கீதத்தைப் பாடத்தொடங்கிவிடும். இது பாப்பரசரின் 80-வது பிறந்தபெருநாளுக்கென்று ஏறக்குறைய 30 லட்சம் ஸ்பானியபிள்ளைகளாலே ஒப்புக்கொடுக்கப்பெற்ற செபங்கள், பரித்தியாகங்களின் புள்ளிவிபரங்களையும் அடக்கியுள்ளது. இதிலே ஒவ்வோர் ஸ்பானியமாகாணத்திலும் வெகுவாகவணங்கிப் பத்தி செய்யப்பட்டுவருகிற மரியாயின் திருச்சுரூபங்களின் சாயல்களைப் பிரதிபலிக்கும் அலங்காரமிக்க பக்கங்களும் இருக்கின்றன. ரோமாபுரியிலே பாப்பரசரின் ஸ்பானியகுருமடத்தின் புதியகட்டடத்திற்கென்றும் ஸ்பானிய பிள்ளைகள் பணம்உபகரித்து வருகின்றுர்கள்.

### மன்ரேசாவில் நூற்றுண்டுவிழா

அர்ச். இஞ்ஞாசியார் பரமபதமடைந்த நான்காம்நூற்றுண்டுவிழா ஞாபகார்த்தமாக மன்ரேசாவில்நடைபெற்ற திருவைபவங்களில் திருச்சபைஅதிகாரிகளும், இராணுவ தலைவர்களும், அரசாங்கஅதிபர்களும் உட்படச் சுமார் 8,000 மக்கள் கலந்துகொண்டார்கள். யேசுசபைஸ்தாபகர் மன்ரேசாவில்தான் கத்தோலிக்க சற்சமயத்தின் அடிப்படையான சத்தியங்கள்மட்டிலே வரிசைக்கிரமமும், தொடர்புமான தியானங்களாகிய தமது "ஞான அப்பியாசங்க"ளை எழுதலாயினர். அங்குநிகழ்ந்த திருவைபவங்களின்போது ஸ்பானிய பாராளுமன்றதலைவரான திரு. எஸ்ரிபான் பில்பாவோ அவர்கள் பேசுகையில், "இங்கே மன்ரேசாவில் ஓர் கெபியின் இருள்மறைவில் கல்வி மேம்பாடற்ற போர்வீரர்ஒருவர்—தாம்அடைந்த காயங்கள் ஆறிக்குணமடைந்துகொண்டுவரும்போது தம்முடைய கரங்களில் தேவபராமரிக்கைவைத்த அர்ச்சியசிட்டர்களின் சீவியவரலாறுகளிலிருந்து தாம் பெறக்கூடியதைக் காட்டிலும்மேலான வேதசாஸ்திரம்யாதொன்றும்அறியாதபோர்வீரர்ஒருவர் ஞானத்தியானங்கள் விஷயமாய் இந்தப்புத்தகத்தை எழுதித்தந்தார்; இது தனதுபக்கங்களில்கொண்டுள்ள எழுத்துக்களைக்காட்டிலும் அதிகமான அர்ச்சியசிட்டர்களை உண்டுபண்ணியிருக்கிறது"எனக் கூறினின்ருர்.

### துறவறம்பூண்ட தம்பதிகள்

ஸ்பானிய ஆகாயப்படையிலே முன்னர் ஓர்கர்னலாகவிருந்த வண. மனுவேல்அலெமன் டேலாசோட்ரா அவர்கள் சமீபத்திலே அவிலாநகரைச்சேர்ந்தஅறேனுஸ்டே சான்பீட்ரோ எனுமிடத்திலுள்ள ஏகாந்த கார்மேல்சபையாரின் அமலோற்பவ கன்னிகாமடத்தில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றபோது, அந்தமடத்திலே ஓர்கன்னியாஸ்திரியாய் இருந்துவருகின்ற அவருடையபாரியார் தனதுநாயகர் குருப்பட்டம்பெறுவதைக் கண்டுகொள்ளலாயினர். இந்தக்கன்னியாஸ்திரி தற்போது கிறீஸ்துவின் சிஸ்றர்மேரி மக்டலேன்என அறியப்படுகின்ருர். குருப்பட்டவைபவம் முடிவடைந்ததும் வண. அலெமன் டேலாசோட்ராசுவாமியார் தமதுபாரியாரை ஆசீர்வதித்தார்.

### ஆபிரிக்காவும் கத்தோலிக்கரும்

ஆபிரிக்கா தனதுகுடிசனமாகிய 21 கோடியே 30 லட்சம்மக்களில் 2 கோடியே 22 லட்சம் கத்தோலிக்கரை இன்றுகொண்டிருக்கின்றது. 1927-ம்ஆண்டிலே அங்கிருந்த கத்தோலிக்கரைக்காட்டிலும் இத்தொகை நாலுமடங்கானது. ஆபிரிக்கா இவ்விதம்அலெக்சாந்திரியா, கார்த்தேஜ்நகர்கள் ரோமாபுரியுடன் வேதவிசுவாசத்திலும், பக்திவைராக்கியத்திலும் போட்டியிட்ட காலத்தைநோக்கித் தீவிரமாகத் திரும்பிக்கொண்டிருக்கிறது. அங்கே கத்தோலிக்கதிருச்சபையின் ஆச்சரியகரமானவிருத்திக்குக் கடந்தமுப்பது ஆண்டுகளிலும் மிஷனரிமார் எடுத்துக்கொண்ட பெருமுயற்சிகளே பெரும்பாலும் காரணமாகும். ஆபிரிக்காவிலே இன்றுமனந்திருப்புவதற்குப் பக்குவமானவர்களாய் 8 கோடிஅஞ்ஞானமக்கள் இருந்துவருகின்ருர்கள். இவர்களைமனந்திருப்ப இன்னும்அதிகமானமிஷனரிமார் அங்குதேவைப்படுகிருர்கள்.

### சிறியபுஷ்பத்தின் சீவியவரலாறு

"ஓர்ஆத்துமாவின் சரித்திரம்" என்ற மகுடநாமத்துடன் சிறியபுஷ்பமாகிய அர்ச். தெரேசம்மாள் தனது கரத்தால்எழுதிய அவளுடைய சுயசரித்திரத்தின் பிரதிரூபம்ஒன்று பிரதிமைபிடித்துத் தயாரித்துப் பரிசுத்தபாப்பரசருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. இதிலே அர்ச். தெரேசம்மாள்செய்த மாற்றங்கள், பிழைதிருத்தங்கள், இட்டபுள்ளடிகள், கீழ்ரேகைகள் ஆதியஎல்லாவற்றுடனும் கூடிய — எழுத்துக்கூட்டலில் ஏற்பட்டுள்ள பிழைகளுடன்தானும்கூடிய மூலவாக்கியங்களெல்லாம் அந்தப்படியே தரப்பட்டிருக்கின்றன. 'அர்ச். தெரேசம்மாள் தனது சகோதரியும், தன்னுடைய மடத்தின் சிரேஷ்டருமான அக்னேஸ்தாயாரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து 1895-ம் 97-ம்ஆண்டுகளுக்கிடையில் ஓர்அப்பியாசப் புத்தகத்தில் தனதுசீவியவரலாற்றைஎழுதலாயினள். ஆனுல், அக்னேஸ்தாயார் அதனைப்பிரசுரஞ் செய்வதற்காகப் பரிசோதனை செய்தபோது, பலமாற்றங்கள்செய்தும், அநேக வாக்கியங்களைநீக்கியும், வசனங்களைச்சேர்த்தும்விடலாயினுர். கார்மேல்சபையைச்சேர்ந்த ஓர்குரவரான பரிசுத்தமரியாயின் வண. பிரான்சிஸ்சுவாமியாரே கையெழுத்து நிபுணர்களின் உதவியைக் கொண்டும், அர்ச்சியசிட்டவளால் பாவிக்கப்பட்ட அதிகம்பிரத்தியேகமான சொற்களைக்கொண்ட அகராதிஒன்றைத் தொகுத்தும் மூலப்பிரதியின்ரூபமாக இதனைப் பிரசுரஞ்செய்யலாயினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆவணி மாதம்

தேவதாயாரின் மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்.

**பொதுக்கருத்து:** பிரிவினைக்காரரின் இயக்கங்களும், மூடப் பக்தி வளர்ச்சியும் செவ்வனே தடைப்படுமாறு வேண்டுக்கொள்வது.

**மிஷன் கருத்து:** ஜப்பானிலே இளைஞர்கல்வி சமயப் பற்றின் அடிப்படையில் ஊன்றியிருக்குமாறு மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத

**பாதுகாவலன்**

1956-ம் ஆண்டு
ஆவணிமாதம் 23-ந் திகதி

## இருபெரும் பிரச்சினைகள்

இன்று தமிழ்மக்களை இரண்டு பெரும்பிரச்சினைகள் எதிர்கொண்டு நிற்கின்றன. அவற்றில்ஒன்று, பாஷைப் பிரச்சினை. மற்றது, பொருளாதாரப் பிரச்சினை. இவ்விருபிரச்சினைகளையும் தீர்க்கும் விஷயமாய் அறிஞர்கள் பலரும் ஆங்காங்கு பலகூட்டங்களில்பேசி வருவதையும், பத்திரிகைகளில் எழுதிவருவதையும் நாமும்ஆராய்வாகக் கவனித்து வருகிரும். அவர்களில் ஒருவர் யாதுகூறுகின்ருர்: "பாஷைப் பிரச்சினையை அரசியற்தலைவர்களிடம் விட்டுவிடுவோம். பொருளாதாரப்பிரச்சினையை நாம் கவனிப்போம். பொருளாதார உயர்ச்சிக்கான துறைகளை வாலிபர் ஆராய்ந்து செயலாற்ற வேண்டும். பணம் படைத்த இளைஞர்கள் இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்று பலவிதமான பயிர்ச்செய்கைகளிலே எமதுநாட்டுக்கு ஏற்றவைகளில் பயிற்சிபெற்று வருவதுதானும் இன்றையநிலைமையில் அவசியமெனக் கருதலாம். இந்த முயற்சியில் கமத்தொழிற் கழகங்கள்தானும் தங்கள்செலவில் சிலரை அனுப்பிப் பயிற்சிபெறச் செய்யலாம். வெங்காயத்துக்கு அருளப்படும் உத்தரவாத விலைத்திட்டம் தொடர்ந்து இருந்துவருமென்பதற்கு எந்தவிதமான உறுதியும் கிடைக்கமாட்டாது. இந்தநிலைமையிலே கமக்காரர் வெங்காயத்தைமட்டும் செய்கைபண்ணி வருவார்களேயானல், ஏமாற்றத்துக்குள்ளாகிப் பொருளாதாரமந்தத்தை அடையநேரிடும். ஆகவே, வெங்காயச்செய்கையுடன் மிளகாய், காய்கறிவகை, கிழங்குவகை, சிறுதானியங்கள்முதலியவற்றைச் செய்கைபண்ணுவதிலும் அதிக கவனம் எடுத்துவருவதானது எதிர்காலத்தில் எமது சமூகவாழ்வுக்கு அவசியமாகும்" எனக் கூறுகின்ருர். அங்ஙனமாக,அரசியல்,பொருளாதாரநிலைமையில் ஏற்பட்டிருக்கும்மாற்றத்தைமுன்னிட்டு, நல்ல வருமானம்தரக்கூடிய பயிர்களைச் செய்கைபண்ணுதற்கான திட்டம்ஒன்றைப் பருத்தித்துறைப் பகுதிக் கமக்காரர் தொடக்கஉத்தேசித்திருப்பதாய் அறிகின்ருேம். வெங்காயத்துக்கு உத்தரவாதவிலை அளித்துவந்தமையாலே இதுவரை பயனடையக்கூடியதாய் இருந்தது. ஆனுல், இந்த உதவி இனிமேல் கிடையாதென்று அவர்கள் உணர்வதாலே கிராமங்கள் ஒவ்வொன்றிலும் என்னென்ன பயிர்களைச் செய்கை பண்ணவேண்டுமென்று சிபாரிசு செய்வதற்காக அங்கு கமக்காரர் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. உள்ளியென அறியப்படும் வெள்ளைப்பூடு,' மல்லி போன்ற உணவுப்பொருட்களை எவ்வாறு செய்கைபண்ண வேண்டுமென்று அறிந்துகொள்வதற்கான வழிதுறைகள் ஆராயப்படுகின்றன. இந்தக் கமக்காரர் சங்கங்களில் ஒன்று இளங்கமக்காரர்இருவரை இந்தியாவுக்கு உபகாரச்சம்பளங்கொடுத்து அனுப்பிவைக்கத் தீர்மானித்திருக்கின்றது. ஆமாம், முயற்சி உயர்ச்சிதரும். இவ்விதமுயற்சிகளும், ஆராய்ச்சிகளும் எங்கும் நடைபெற வேண்டும். சமூகமுன்னேற்ற சங்கங்களும், கிராமாபிவிர்த்திச் சங்கங்களும், கூட்டுறவுச்சங்கங்களும், பிறவும் முன்வந்து தமிழ்மக்களின் பொருளாதாரத்தை வளப்படுத்த ஏதேதுசெய்யக்கூடுமென அவைகளையெல்லாம் செய்துவருமிடத்து, பலன் வராமற்போக மாட்டாது.

## சந்நியாச தங்கயூபிலி

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே பருத்தித்துறை, வங்காலை, மன்னார், வலிகாமம்கிழக்கு, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், பரிசுத்த அடைக்கல மாதா கோவில், பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவில் ஆதியாம் விசாரணைப்பங்குகளிலே முப்பதுஆண்டுகளுக்குமேல் புகழ்ச்சிக்குரியவிதமாகத் திருத்தொண்டாற்றித் தமது ஞானமக்களாலே வெகுவாகக் கொண்டாடப்பெற்று வந்தவரும், தற்போது தம்முடைய 70-ம்வயதிலே தம்சுவநாடாகிய பிரான்ஸ்தேசத்தில் நோட்றேடாமைச்சேர்ந்தபொன்மான்எனுமிடத்தில் சஞ்சரித்து வருகிற வருமான வண. ஹென்றி பெருசல்சுவாமியவர்கள் நிகழும்ஆவணிமாசம் 25-ந்திகதியாகிய நாளைநின்றுவரும் சனிவாரம் தமது சந்நியாச தங்கயூபிலியைக் கண்டு களிக்கவிருக்கிருரென அறிகின்ருேம். அரும்பிரயாசையெடுத்து அல்லும்பகலும் அயராதுழைத்து, ஆகாயமண்டலத்தை அளாவும்படியாக அத்துணைபெரும் அலங்காரமான பெரிய ஆலயத்தைக் கட்டியெழுப்பித் தங்கள்உள்ளங்களை அன்பினுற் கொள்ளைகொண்டு, உள்ள நாள்மட்டும் தங்கள்நன்றிக்குப் பாத்திரரான சுவாமியவர்களின் இந்த யூபிலிவிழாவை யாழ்ப்பாணம், பரிசுத்த அடைக்கல நாயகிகோவில் கிறீஸ்துவர்கள் அன்புடன் சிறப்பாகக் கொண்டாடமுனைந்து, அதற்கான ஆயத்தமெல்லாம் செய்துகொண்டு வருகிருர்களென அறிவது சந்தோஷமே. இவ்விழாவைமுன்னிட்டு அன்றுகாலை 6-30 மணிக்கு அடைக்கலமாதாகோவிலிலே ஓர் தோத்திரபாடற்பூசை நிறைவேறும். அதன்மேல் சுவாமிகளுக்கு யூபிலிச் சோபன தந்திஒன்று அனுப்பிவைக்கப்படும். பின்னர் சுவாமிகளின் பெரியபிரதிமைப்படத்தை நடுவிடமாகக்கொண்டு, அவருக்குப்பின் இதுவரை அக்கோவிலின் கட்டளைக்குருமாராய் இருந்தவர்களின் பிரதிமைப் படம்ஒன்று பிடிக்கப்பெற்று அவருக்கு அனுப்பிவைக்கப்படும். யூபிலி நாயகர் பல்லாண்டுவாழ்க!

## கருதினல் கிறிவ்வின்ஆண்டவர்

லண்டன்நகரிலே வெஸ்றமினிஸ்றர் அதிமேற்றிராணியாரான கருதினல் பேர்ணுட் கிறிவ்வின்ஆண்டவர் சென்ற 20-ந்திகதி திங்கட்கிழமை காலை மார்படைப்பினுல் காலஞ்செல்லலாயினுரெனத் தந்திச்சமாச்சாரம்கிடைத்திருக்கிறது. விடுமுறையிலே கோண்வாவில் சஞ்சரித்திருந்த கருதினல் ஆண்டவர் நடுச்சாமத்துக்குமுன் சடுதியாக மார்படைப்புக் கண்டு, அந்தியதேவதிரவிய அனுமானங்களைப் பெற்றுக்கொண்டதன்மேல் அர்ச். பேர்ணுட்டின் திருநாளாகிய அன்றுகாலை 12-52 மணிக்குச் சமாதானமாக மரணத்திரையில் மறையலாயினர். தற்போது 57 வயதுடையவரான கருதினல்ஆண்டவர் இங்கிலாந்திலும், வேல்சிலுமுள்ள கத்தோலிக்க அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாருக்கெல்லாம் தலைவராக விளங்கியிருந்தார்.

## கருதினல் ஆண்டவரும் கம்யூனிஸ்தரும்

ஹங்கேரிய கம்யூனிஸ்தஅதிகாரிகள் அந்நாட்டின் திருச்சபைப் பிரதமஅதிகாரியான கருதினல் மின்ட்சென்றிஆண்டவரை எங்காவது ஓர் வெளிநாட்டில்போய் — விசேஷமாய் ருேமாபுரியில்போய் ஒதுங்கிவாழும்படி புத்திசொல்லி இசையப்பண்ணுமாறு அந்நாட்டின் திருச்சபை அதிகாரிகளைக் கேட்டிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. அங்ஙனம் நாட்டைவிட்டு வெளியேறுவாராகுல் நியாயமான உபகாரச்சம்பளம் வழங்கப்படுமென்றும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்தர்கள் இதற்குமுன்னும் தந்திரசூழ்ச்சியாக அவரை வெளியேற்றிவிடுமாறு இருதடவைமுயன்றபோதிலும் கருதினல் ஆண்டவரோ அவர்களின் கேள்விக்கிசைய அறவே மறுத்துவிடலாயினர். கருதினல்மின்ட்சென்றி ஆண்டவரைக் கம்யூனிஸ்தர்கள் இவ்விதம் நாட்டைவிட்டுக்கடத்திவிட முயல்வதற்கான முக்கியகாரணம், அங்குள்ள எஸ்றர்கோம் மகாலயமானது அபிஷேகஞ்செய்யப்பெற்ற நூற்ருண்டு விழாக்கொண்டாட்டம் அடுத்துநிகழும் புரட்டாதிமாதம் 2-ந்திகதியன்று நிகழவிருப்பதை யிட்டுத்தானென நம்பப்படுகிறது. இந்தவிழாக்கொண்டாட்டத்தின்போது அவர் தமது சொந்த மேற்றிராசனமாகிய எஸ்றர்கோம்செல்லாது தடைவிதிக்கப்பட்டுக் கொண்டாட்டம் நடைபெறுமிடத்து அங்கு ஏற்கனவே ஆட்டங்கண்டுள்ளகம்யூனிஸ்தஆட்சிக்கேஅது பெருஞ்சங்கடம்உண்டுபண்ணுவதாகும். எஸ்றர்கோம் மகாலயமானது, ஹங்கேரியின்அரசரான அர்ச். ஸ்ரீபின்பிறந்து ஞானஸ்நானம் அருளப்பெற்ற குன்றின்மேல் நிறுவிநிற்கின்றது. கம்யூனிஸ்தஅரசாங்கம் அங்கே இந்த நூற்ருண்டுவிழாக் கொண்டாட்டத்தைநிறுத்திவிடத் தன்னுலானதெல்லாம் செய்துவருகின்றது.

## உங்களுக்குத் தெரியுமா ?

1. ஓர்கப்பலின் தளத்திலிருந்து ஆகாயவிமானம் ஒன்று முதன்முதலாகப் பறந்துசென்ற வீரத்துவ செயல் எப்போது நடைபெறலாயிற்று ?

1910-ம்ஆண்டு கார்த்திகை 14-ந் திகதியன்று நடைபெறலாயிற்று. அன்று ஈயூஜின் ஈலை என்ற அமெரிக்கவிமானி ஒற்றைஎஞ்ஜின்பூட்டிய ஓர் சிறியவிமானத்தை ஐக்கிய அமெரிக்கதேச பேர்மிங்காம்என்ற குறுயிசர்க்கப்பல் தளத்தின் இறக்கமான மரப்பாதைமூலம் இறக்கியெடுத்துப் பறந்துபோயினுர். அப்போது இந்தக்குறுயிசர்க்கப்பல் வேர்ஜினியாவைச்சேர்ந்த ஹம்ரன் ருேட்ஸ் துறைமுகத்தில் நங்கூரமிட்டுநின்றது. அதன்மேல் இருமாதங்களின்பின் அவர் கரையிலிருந்து பறந்துபோய் பென்சில்வேனியாஎன்ற குறுயிசர்க்கப்பலின் தளத்தில் இறங்கினுர். அன்றுதான் வருங்கால விமானந்தாங்கிக் கப்பல்களைக்கட்டும் எண்ணம் உதிக்கலாயிற்று.

2. முதல்அணுக்குண்டு எங்கே, எப்போது வெடிக்கவைத்துப் பரிசோதனை செய்யப்பட்டது ?

ஐக்கிய அமெரிக்கதேச நியூமெக்சிக்கோ நாட்டைச்சேர்ந்த வெண்மணல் பரீட்சாநிலத்தைச்சேர்ந்த திறினிற்றி ஸ்தானத்திலே இற்றைக்குப் பதினெருவருடங்களின்முன் ஆடிமாதம் 15-ந்திகதியன்று வெடிக்கவைத்துப் பரிசோதனை செய்யப்படலாயிற்று. அன்றுதினம் அணுச்சக்தியைச் சரியானமுறையாக உபயோகிக்கக் கடவுள்வழிகாட்ட வேண்டுமென்று இரந்துகேட்டு ஓர்பிரான்சீஸ்கன்சபைக் குரவரான வண. ஜோண் போர்லிசுவாமியாரால் அந்த இடத்தில் ஓர்திவ்விய பூசை நிறைவேற்றப்படலாயிற்று. அதேயிடத்தில்தானே புறெட்டஸ்தாந்தரும், யூதர்களும் அன்றுதினம் வேறுவேருக வழிபாடுநடத்தினுர்கள்.

● யேசுசபை ஸ்தாபகரான அர்ச். லொயலா இஞ்ஞாசியார் பரமபதம் அடைந்த நான்காம்நூற்ருண்டின் ஞாபகார்த்தமாக வத்திக்கான் தபாற்கந்தோர் 35 லையர், 60 லையர் பெறுமதியான இருதபால் முத்திரைகளைப் பாவனைக்கு விடுத்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தூய கன்னிமை"
## என்னும்
## 12-ம் பத்திநாத பாப்பரசரது
# பொதுநிருபம்

(முன்தொடர்ச்சி)

### (ஆ) பாவச்சோதனைகளுக்குத் தூரவிலகுதல்

இவ்விஷயத்தில், திருச்சபைப் பிதாக்களும், வேதபாரகரும் படிப்பிப்பதுபோல், நாம் அவதானிக்க வேண்டிய குறிப்பொன்றுண்டு. அதுயாதெனில், பாவச்சோதனைகளையும், ஆசாபாசங்களின் இயக்கங்களையும் நேராக எதிர்த்துப் போர்புரியாமல், நம்மால் இயன்றமட்டும் அவைகளுக்கு விலகி ஓடிவிடுவதே அவற்றை அடக்கி ஆளுவதற்குச் சுலபமான வழி என்பதாம். அர்ச். ஏரோணிமூவரின் படிப்பினையின்படி, நேர்முகமாய் யுத்தஞ் செய்வதிலும் பார்க்கத் தப்பிஓடுவதே பரிசுத்த கற்பைக்காப்பதற்குச் சிறந்த முறையாம்: "தோல்வியடையாதிருக்கும் பொருட்டே நான் விலகி ஓடுகிறேன்" என்கிறார் (Contra Vigilant. 16). இவ்விதம் விலகி ஓடுவதைப் பின்வருமாறு விளங்கிக்கொள்ள வேண்டும்: நாம் பாவச் சமயங்களிலிருந்து அதிகவனமாய் விலகிக் கொள்வதுமல்லாமல், இத்தகைய போராட்டத்தில் முக்கியமாய் நம் மனதையும் இருதயத்தையும் தேவன்பக்கம் எழுப்பி, நம் கன்னிமை வாக்குத்தத்தத்தின் இலக்காயிருக்கிற அவரையே யாவற்றையும் பார்க்க நோக்க வேண்டும். "உங்கள் அன்பரின் அழகை உற்றுநோக்குங்கள்" என்று அர்ச். அகுஸ்தீனர் கூறுகின்றார் (De Sancta Virginitate C. 54).

பூரண கற்பைப் பாதுகாப்பதற்குப் பாவச்சமயங்களைக் கவனமாய் விலக்கி நடக்கும் தூரஅகலலும், உற்சாகவிழிப்புமே தூயஆடவர் பெண்டிரால் அதிசிறந்த வழிகளாக எப்போதும் கருதப்பட்டு வந்துள்ளன. ஆனால், தற்காலத்தில் யாவரும் இக்கூற்றை ஏற்றுக்கொள்வதாகத் தோன்றவில்லை. ஏனெனில், சகல கிறிஸ்தவர்களும், சிறப்பாக வேதியரும், பண்டைக்காலத்திற்போல் "உலகத்திற்குப் புறம்பானவர்களாய் இராமல் அதனுடன் நெருங்கியதொடர்புள்ளவர்களாய்" இருத்தல் அவசியம்; ஆகவே, அவர்கள் "அபாயத்தைக் கையேற்று" அதை எதிர்ப்பதற்குத் தமக்குச் சக்தியுண்டோ, இல்லையோ என அறியும்பொருட்டுத் தம்கற்பைப் பரிசோதனைக்கு விடவேண்டும் என்று ஒரு சிலர் கருதுகின்றனர். எனவே, இளம் வேதியர் யாவற்றையும் மனச்சாந்தியோடு உற்றுநோக்கப் பழகிக்கொள்ளும் பொருட்டும், அவ்வாறே பாவச்சோதனைகளால் தீண்டப்படாதிருக்கும் பொருட்டும், அவர்கள் விரும்பிய யாவற்றையும் கட்டுப்பாடின்றிப் பார்க்கட்டும் என்றும் கூறுகின்றனர். இதன்பயனாக, இளம் வேதியர் அடக்க ஒடுக்கத்தைச் சற்றேனும்கவனியாது, தங்கள் கண்களை விரும்பிய பக்கமெல்லாம் திருப்புவதற்கு அவர்களுக்குத் தடையின்றிச் சுயாதீனம் அளிக்கின்றனர். திருச்சபை அதிகாரிகளால் பரிசோதித்து விலக்கப்பட்டுள்ள சலனப்படக்காட்சிகளுக்கும் அவர்கள் சமுகம் அளிக்கலாம்; கெட்ட சஞ்சிகைகளையும் வாசிக்கலாம்; திருச்சபையால் அல்லது சுபாபப்பிரமாணத்தால் விலக்கப்பட்டிருக்கும் இன்பக்கதைகளையும் வாசிக்கலாம்; ஏனெனில், தற்கால உலகில் பொதுமக்கள் இத்தகைய இன்பப் பொழுது போக்குகளையும், பிரசுரங்களையுமே சுகிக்கின்றனர். ஆகையால், இவர்களுக்கு உதவி புரிய விரும்பும் வேதியர், இவர்களுடைய சிந்தனைமுறைகளையும் உணர்ச்சிகளையும் நன்கு அறிந்திருத்தல் அவசியம் என்றும் சாற்றுகின்றனர்.

ஆனால், வேதியர்கள் தங்கள் அழைத்தலுக்குரிய மேலான பரிசுத்ததனத்தை அடையும் பொருட்டு அவர்களை மேற்குறிப்பிட்டபடி பயிற்றுதல் முற்றும் தவறானதும் தீங்குநிறைந்ததுமான முறை என்பது வெளிப்படை. ஏனெனில், "அபாயத்தை விரும்புகிறவன் அபாயத்தில் மாள்வான்" (எக்கி. 3, 27) என்று வேதாகமம் படிப்பிக்கின்றது. அன்றியும், அர்ச். அகுஸ்தீனரின் பின்வரும் புத்திமதியும் இவ்விஷயத்தில் மிகப்பொருத்தமானது: "உனது கண்கள் ஆபாசமுள்ளவைகள் என்றால் உன்னுடைய மனம் கற்புள்ளதென்று கூறாதே. ஏனெனில், ஆபாசமுள்ள கண் கற்பற்ற இருதயத்தைக் காட்டிக் கொடுக்கின்றது" (Epist. 211, N. 10).

இத்தீங்கு நிறைந்த முறைக்கு அடிப்படையாய் இருப்பது பெரும் மனமயக்கமே என்பதற்கு ஐயமில்லை. உண்மையில், நம் கர்த்தராகிய கிறிஸ்துநாதர் தம்முடைய அப்போஸ்தலர்களைப்பற்றி, "நான் அவர்களை உலகத்திற்கு அனுப்பினேன்" (அரு. 17, 18) என்று கூறியபோதிலும், "நான் உலகத்தவன் அல்லாததுபோல அவர்களும் உலகத்தவர் அல்லர்" (அரு. 17, 16) என்றும் அவர்களைக்குறித்து முன்கூறியுள்ளார். அன்றியும், தமது பரலோக பிதாவைப்பார்த்து அவர்களுக்காகப் பின்வருமாறு பிரார்த்தித்துள்ளார்: "தேவரீர் அவர்களை உலகத்தில் நின்று எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், தின்மையில் நின்று அவர்களைக் காப்பாற்றும்படியே பிரார்த்தித்துக்கொள்ளுகிறேன்" (அரு. 17, 15). இப்படிப்பினைகளைப் பின்பற்றும் பொருட்டும், உலகத்தோடு நெருங்கிய தொடர்புடையோரைப் பொதுவாய்த் தாக்குகிற பாவச்சோதனைகளிலிருந்து குருமாரைப் பாதுகாக்கும் பொருட்டுமே, திருச்சபையானது விவேகமும் தகுதியும்வாய்ந்த சட்டங்களை விதித்துள்ளது. இவற்றின் நோக்கம் குருத்துவ பரிசுத்ததனத்தைச் சாதாரண கிறிஸ்தவர்களுக்குரிய மனக்கவலைகளிலும் இன்பங்களிலும் இருந்து பாதுகாப்பதேயாம்.

ஆகையால் ஞானச்சீவியத்திலும், குருத்துவ சந்நியாச சாங்கோபாங்கத்திலும் பயிற்றப்பட வேண்டியவர்களான இளம் வேதியர், ஞானப்போர்க்களத்தில் இறங்குமுன் இவ்வுலக அமளியிலிருந்து விலகியிருத்தல் எத்துணை அவசியம்! இவர்கள் குருமடத்திலோ, அன்றேல் சந்நியாச மடத்திலோ பல்லாண்டுகள் வாழ்ந்து தற்கால உலகத்தில் தாண்டவமாடும் பிரச்சினைகளைப்பற்றிய அறிவிலும் அவற்றைத் தீர்க்க வேண்டிய முறையிலும் நாம் "Menti Nostrae" என்னும் நமது அப்போஸ்தொலிக்க நன்மதியில் நியமித்த விதிகளின்படி, அதிகவனமாயும் திறமையாயும் பயிற்றப்படல் அவசியம். தெரிந்தெடுக்கப்பட்ட இளம் பயிர்களை எக்கமக்காரன் தான் அவைகள் இன்னும் அடையாத வலிமையை அத்தாட்சிப் படுத்தும்படி உக்கிரமான புயற்காற்றிற்கு திறந்து வைப்பான்? குருத்துவ மாணவரும் பாலசந்நியாசிகளும் வலிமையற்ற இளம் பயிர்களுக்கு ஒப்பாகக் கருதப்பட வேண்டும். ஆகவே, அவர்கள் நன்கு பாதுகாக்கப்பட்டும், உலகப் பற்றுக்களை எதிர்த்துப் போர்புரியப் படிப்படியாகப் பயிற்றப்பட்டும் வரவேண்டும்.

### (இ) கிறிஸ்தவ அடக்கஒடுக்கம்

பூரண கற்பை அனுசரிப்பதற்குக் கிறிஸ்தவ அடக்க ஒடுக்கம் மிகவும் அவசியம். இதன் நிமித்தமே, அது கற்பின் விவேகம் என்று அழைக்கப்படுகிறது. எனவே, இளம் வேதியரைப் பயிற்றுவோர் கிறிஸ்தவ அடக்க ஒடுக்கத்தின் பிரமாணங்களை அவர்களுடைய இளம் உள்ளங்களில் நன்கு பதியச் செய்வார்களாயின், அவர்கள் விலைமதித்தற்கரிய, மிகப்பிரயோசனமுள்ள ஒருசேவையை புரிவார்கள் என்க. ஏனெனில், அடக்கஒடுக்கமானது பயமுறுத்தும் அபாயங்களை முன்னரே அறிந்துகொள்ளுகின்றது; அபாயத்திற் புகாவண்ணம் நம்மைத் தடுக்கின்றது; விவேகமற்றோர் விலக்கிக் கொள்ளாத பாவச்சமயங்களை நீக்கி நடக்கும்படி கற்பிக்கின்றது. கெட்ட பேச்சுக்களையும், கொச்சை மொழிகளையும், அது விரும்புவதில்லை; அசுசியான யாவற்றிலுமிருந்து பின்வாங்குகின்றது; சரீரம் கிறிஸ்துநாதரின் அவயவமாகவும் (I கொரி. 6, 15), தூயஆவியானவரின் ஆலயமாகவும் (I கொரி. 6, 19) இருக்கிறபடியால், அதற்குத் தகுந்த மரியாதை செய்யும்படி ஆத்துமத்தை ஏவுகின்றது. ஆகவே, மறுபாலாரோடு ஏற்படக்கூடிய சமுசயத்திற்குரிய நெருங்கிய நட்பைக் கவனமாய் விலக்குகின்றது. கிறிஸ்தவ அடக்க ஒடுக்கமாகிய திரவியத்தைக் கொண்டுள்ள ஒருவன் கற்புக்கு எதிரான எப்பாவத்தையும் அரோசித்துத் தள்ளிவிடுகிறான்; அதன் ஆசை மயக்கங்களால் இழுக்கப்படும்போது உடனுக்குடனே நீங்கிக் கொள்ளுகிறான்.

கற்போடு சம்பந்தப்பட்ட விஷயங்களில் இளைஞர்களின் மனச்சாட்சியை நன்கு பயிற்றுவதற்கு அடக்கஒடுக்கம் பெற்றோருக்கும் பயிற்றுவோருக்கும் தகுந்த மொழிகளைத் தெரிவிப்பதுமல்லாமல், அவற்றைத் தேடியும் கொடுக்கும். ஆகவே, "கற்பைப்பற்றி எப்போதும் மௌனம் சாதிப்பதுதான் அடக்க ஒடுக்கமென்றும், நல்லொழுக்கக் கல்வியை ஊட்டும்போது கற்பைச் சார்ந்த விஷயங்களைப்பற்றி அமைதியோடும் கவனத்தோடும் உரையாடுதலும் அதனால் தடுக்கப்பட்டிருக்கின்றது என்றும் எண்ணுவதற்கு இடமில்லை" என்று நாம் அண்மையில் ஆற்றியசொற்பொழிவு ஒன்றில் கூறியுள்ளோம். இக்காலத்திலோ, சில ஆசிரியர்களும் பயிற்றுவோரும் மாசற்ற சிறுவர் சிறுமியர்களுக்கு மனித பிறப்பின் இரகசியங்களை அவர்கள் நாணமடையக்கூடிய விதமாகப் படிப்பித்தல் தம் கடமையெனக் கருதுகின்றனர். ஆனால், கிறிஸ்தவ அடக்க ஒடுக்க விதிகளின்படி, இவ்விஷயத்தில் நியாயமான மட்டுத்திட்டத்தைக் கையாளுதல் அவசியம். அர்ச். முதலாம் சாந்தப்பர் என்னும் பாப்பானவர் பின்வரும் வாக்கியத்தில் கூறுவதுபோல், அடக்க ஒடுக்கம் தேவ பயத்தால் போஷிக்கப் படுகிறது; பிள்ளைக்குரிய இப்பயம் கிறிஸ்தவ தாழ்ச்சி என்னும் ஆழ்ந்த புண்ணியத்தை அடிப்படையாகக் கொண்டு, அற்ப பாவத்தைத்தானும்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீதியாயிருந்த நாலரைரூபா

ஆனந்தராசன் ஆபீசிலிருந்து வீடு வந்ததும், 'வசந்தா, வசந்தா' என்று கூப்பிட்டுக்கொண்டே சமையல் அறைக்குள் நுழைந்தான். நுழைந்தவன் அங்கு தன்மனைவி வசந்தா முகத்தைக் கோணவைத்துக்கொண்டு சட்டியைத் தூக்கிப் பெட்டியில்போடுவதும், பெட்டியைத்தூக்கிச் சட்டியில்போடுவதுமா யிருக்கக்கண்டான்.

"ஏண்டிஅம்மா, உனக்கு இவ்வளவுகோபம்?"

"போதும், போதும் குறைச்சலில்லை. இவ்வளவாவது கேட்க வந்துவிட்டீர்களே!"

"உனக்கென்னடி வேண்டும்? ஏதாவது வேண்டுமானால் கேள். வாங்கித்தருகிறேன்."

"உங்கள்வீட்டுக்குவந்து வருடம் மூன்றாகிறது. ஏதோ இல்லையென்று சொல்லாமல் இரண்டு மூன்றுதடவை பூவாங்கிக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், உடுத்த நல்லபுடவை உண்டா? இல்லை. போட்டுக்கொள்ளத்தான் சரியான சட்டைஉண்டா? ஒன்றுங் கிடையாது. இந்தலட்சணத்திலா கேட்கிறதையெல்லாம் நீங்கள் வாங்கித்தரப்போகிறீர்கள். இருந்துஇருந்து எனதுதகப்பனும் "தேடி எடுத்தேனே திருவாழிமோதிரத்தை; வாரிஎடுத்தேனே வழிநிறைந்த திரவியத்தை" என்று எனக்குத்தான் மாப்பிள்ளை பார்த்தார்களே. அவர்களையல்லவா நோகவேண்டும். உங்களைநொந்து பயனென்ன?"

"ஏண்டி, நமதுவீட்டில் உனக்கென்னகுறைச்சல்?"

"ஆமா, ஆமா, குறைச்சல் ஒன்றுமே இல்லை. அடுத்தவீட்டு அருளம்மாள் அழகான அச்சடிப்புடவை உடுத்தியிருக்கிறாள். பக்கத்துவீட்டுப் பாக்கியம் பனாரஸ் பட்டுப்புடவை உடுத்தியிருக்கிறாள். மேலைவீட்டுமேரி மேலான சரிகைப்புடவை உடுத்தியிருக்கிறாள். எதிர்வீட்டு எஸ்தேர் எட்டுமுழக் கார்ஜன்புடவை உடுத்தியிருக்கிறாள். கடைசிவீட்டுக் கமலம் கனகாம்பரம் உடுத்தியிருக்கிறாள். எனக்குமாத்திரம் இரண்டுரூபா நாட்டுப்புடவையைத்தவிர வேறு பட்டுப்புடவை ஒன்றும் கிடையாது. இந்தப்புடவையை உடுத்திக்கொண்டு வெளியேஇறங்கக்கூட வெட்கமாயிருக்கிறதே."

"சரிதாண்டிஅம்மா, சரிதான். 'புலியைப்பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்டதுபோல' அவர்களைப்போல் நம்மால் செலவழிக்க முடியுமா? அவர்களுக்கு வேண்டிய மட்டும் ஆஸ்திபாஸ்தி இருக்கிறது. நம்முடைய வரவென்ன? செலவென்ன? மாதம் 30 ரூபா சம்பளத்தைத்தவிர வேறு ஆஸ்தி நமக்கென்னஇருக்கிறது! அப்படி வேறு ஏதாவது ஆஸ்தியிருந்தால் சொல். இச்சணமே உனக்குப்பிரியமான புடவைகளையெல்லாம் வாங்கித்தரலாம்."

"சரி, அதுதான் இல்லையென்று வைத்துக்கொள்ளுவோம். எங்கேயெல்லாமோ வேடிக்கைநடக்காமே. என்றைக்காவது ஒருநாள் என்னைக் கூட்டிக்கொண்டு போயிருக்கிறீர்களா? 'ரேயம்பார்க்'கில் வாண வேடிக்கை நடக்கிறதாம். 'கார்சன் கிறவுண்'டில்சேர்க்கஸ்நடக்கிறதாம். வெலிங்ரன் தியேற்றரில் 'அம்பிகாவதி' நடக்கிறதாம். எதையாவது ஒன்றைப்பார்க்கக் கூட்டிக்கொண்டு போகக்கூடாதா?"

"வசந்தா! போகவேண்டிய இடம் எது, போகக்கூடாத இடம் எதுவென்று இன்னும் உனக்குத் தெரியவில்லையே. வேடிக்கைகளைப் பார்க்க வேண்டியதுதான். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், அங்கே வாலிபர்கள் கூட்டந்தான் அதிகமாயிருக்கும். ஆகையால், பெண்கள் அங்குபோவது எனக்கு அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை."

"ஆமா, ஆமா, அங்குபோகிறவர்களெல்லாம் பெண்களில்லையா? நான் மாத்திரந்தானா பெண்? மனமுண்டானால் இடமுண்டு" என்று கோபங் கலந்ததொனியுடன் கூறிவிட்டுத் தன்அலுவலைக் கவனிக்கச் சென்றுவிட்டாள் வசந்தா.

மறுநாள்மாலை வசந்தா அதிக உற்சாகத்தோடு தன்கணவன் எப்பொழுது ஆபீசிலிருந்து வருவாரோ என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். இவ்வளவு உற்சாகத்துக்கும் காரணம்என்னவென்றால், ஆனந்தராசன் அவளை அன்று மாலை வேடிக்கைபார்க்க அழைத்துக்கொண்டு போவதாகச் சொன்னதே. ஆனந்தராசன் ஆபீசிலிருந்து வந்தான். வந்ததும் அவனுக்கு வேண்டிய உபசரணையெல்லாம் புன்னகைபூத்த முகத்துடன் செய்துமுடித்தாள் வசந்தா. சிற்றுண்டி அருந்தியதும் இருவரும் வேடிக்கை பார்க்கப் புறப்பட்டார்கள். போகும் வழியில் ஒருபுடவைக்கடை தென்படவே இருவரும் அதற்குள் நுழைந்தார்கள். நுழைந்தவர்கள் சும்மா வெளியேவரவில்லை. 65 ரூபா விலையுள்ள பட்டுப்புடவையோடு வெளிவந்தார்கள். வசந்தாவும் 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்றபடி தனக்குவேண்டியசாமான்களையெல்லாம் வாங்கிக்கொண்டாள். ஆனந்தராசனும் அவள் வாங்கின சாமான்களுக்கெல்லாம் காசு கொடுத்துக்கொண்டே வந்தான்.

கடைசியாக வெலிங்ரன்தியேற்றருக்குள் நுழைந்தார்கள். படக்காட்சியைக்கண்டு களிகூர்ந்தார்கள். நடிப்பைப்பார்த்து நயந்தார்கள். பாட்டைக்கேட்டுப் பரவசமானார்கள். தமாஷ் காட்சிகளைப்பார்த்து வயிறுகுலுங்கச் சிரித்தார்கள். காட்சியும்முடிந்தது. அன்று அமாவாசைஇருட்டானபடியால் எங்கும் மிகுந்தஇருள் சூழ்ந்திருந்தது. ஆகவே, அவர்கள் ஒருகாரை வாடகைக்குப்பேசி அதில் 'ஜம்மென' ஏறி உட்கார்ந்துகொண்டார்கள். காரும் விரைந்துசென்றது. அப்பொழுது வசந்தா "ஏது இன்றைக்கு ஒருநாளுமில்லாத திருநாளாய் இவ்வளவு செலவுசெய்து விட்டீர்களே! 100 ரூபாவுக்குமேல் செலவு இருக்குமே. எங்கேயாவது கண்டெடுத்தீர்களா? அல்லது உங்கள் முதலாளியிடம் கடன் வாங்கினீர்களா?" என்று கொஞ்சலாகக்கேட்டாள். ஆனந்தராசன் அசட்டுச்சிரிப்புச் சிரித்

(அடுத்தபக்கம் பார்க்க)

# மொகலாய சக்கிரவர்த்திகளின் அரண்மனையில் கிறீஸ்துவ குருமார்

(முன்தொடர்ச்சி)

தமதுஇராச்சியத்தில் அந்தக்கிறீஸ்துவகுருமார் எத்தனை ஆலயங்கள் வேண்டுமானாலும் கட்டியெழுப்ப அனுமதியளித்தார் அக்பார். அவ்வாலயங்கள் எவ்வளவுஅழகாக அமைக்கப்படக்கூடுமோ அவ்வளவு அழகுடன் அமைக்கலாமென்றும் கூறினார். "எமதுஇராச்சியத்தில் மகமதியர்களுக்கு அத்தனை பள்ளிவாசல்களும், இந்துக்களுக்கு அத்தனை ஆலயங்களும் இருக்கையில், கிறீஸ்துவர்களுடைய தேவனுக்கு அதேயளவு மகிமை செலுத்தப்படவேண்டாமா?" என்பார். வியாதிஸ்தர்களுக்கும், ஏழைமக்களுக்கும் ஒருஆஸ்பத்திரி கட்டியெழுப்பி, அதை நடத்துவதற்குவேண்டிய நிதியும்ஒதுக்கிவைத்து, அதனை அந்தயேசுசபைக்குருமாரின் நிர்வாகத்தில் ஒப்படைத்தார்.

இவ்வளவு செய்தும் சக்கிரவர்த்தி மனந்திரும்புவார்என்பதற்குச் சொற்ப அறிகுறியும் தென்படவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த குருமார் 1583-ம் ஆண்டு ஃபாத்தெப்பூர் ஸிகிரிநகரை விட்டுக் கோவாவுக்குச்சென்றனர். (அந்தக்கோஷ்டியின் தலைவராகிய ஆக்வா வீவாசுவாமியார் சால்செட் என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டு, 1583-ம் ஆண்டு ஆடிமாதம் 25-ந் திகதி வேதசாட்சியாக மரணமடைந்தார்.)

ஏழுவருடங்கள் உருண்டோடின. 1590-ம் ஆண்டு ஆக்ராநகரில் கிறீஸ்துவர்கள் தேவமாதா மோட்சத்திற்கு ஆரோபணமான திருநாளைச் சிறப்புடன் கொண்டாடினர். அக்பார் சக்கிரவர்த்திக்குத் திவ்வியயேசுவினதும், அவருடைய திருத்தாயாரினதும ஞாபகம்வந்தது. அக்கொண்டாட்டத்தில தாமும் கலந்துகொள்ளவிரும்பி ஓர் அழகிய சிம்மாசனம்அமைத்து ஆக்வாவீவாசுவாமியார் தமக்குக்கொடுத்த தேவமாதாபடத்தை அதில்ஸ்தாபித்து, தாமேமுதலில் அதைமுத்தஞ்செய்து வணக்கம்செலுத்தியபிறகு தமது பிரபுக்களும, உயர்தரஅதிகாரிகளும் அவ்வாறே செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

அக்காலத்தில் கிறீஸ்துவகொள்கைகளை அவர்எவ்வளவாக மதித்துவந்தாரெனில், தமது வைப்பாட்டிகளுள் அநேகம்பேர்களை அனுப்பிவிட்டார். தமதுஇராச்சியத்தில் எவரும் ஒரு மனைவிஇருக்கையில் மற்றுமொரு மனைவியை மணந்துகொள்ளலாகாது என்று ஒருசட்டம் இயற்றியதாகவும் கர்னல் கென்னடிஎன்ற சரித்திராசிரியர் எழுதியுள்ளார்.

அக்பார் லாகூரை அரசாங்கதலைநகராகக் கொண்டிருந்தபோது மீண்டும் யேசுசபைக்குருமாரின் மிஷன் ஒன்றுவந்தது. அதன்பிறகு மூன்றாம் முறையாகவும் ஒருமிஷன்வந்தது. அக்பார் கிறீஸ்துவேதத்தில சேரவில்லையெனினும், ஒவ்வொருதடவையும் குருமார்வந்தபோது மிகுந்தமரியாதையுடனும், பரிவுடனும் அவர்களை வரவேற்றார். தமதுஇராச்சியத்திலுள்ள எவரும் அவர்இட்டப்பட்ட எந்த மதத்தையும் அனுசரிக்கச் சட்டபூர்வமாக உரிமைஅளித்தார். லாகூரில் ஒருஅழகியஆலயமும், கல்லூரியும் கட்டியெழுப்பினார்.

1610-ம் ஆண்டு இராசகுடும்பத்தைச்சேர்ந்த மூன்றுஆடவர் ஜெரோனிம் சேவியர் சுவாமியார் கையால் பகிரங்கமாக ஞானஸ்நானம்பெற்றனர். கிறீஸ்துவத்திற்கு எவ்வளவு உயர்ந்த மதிப்பு இருந்ததெனில், மொகலாய சக்கிரவர்த்தியின் இராச்சியத்தில் பாரசீகமன்னரின் ஸ்தானிகராக இருந்தவர் தமதுபிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் அளிக்கச்செய்தார். பிரபுக்கள் பலர் கிறீஸ்துவேதத்தில் சேர்ந்தனர்.

அக்பார்இறந்து ஜெஹாங்கீர் அரசாளத்தொடங்கிய காலத்திலும் கிறீஸ்துவத்திற்கு அதேயளவு செல்வாக்குத் தொடர்ந்து இருந்துவந்தது. ஆக்ராவில் ஒருமிஷன் ஏற்படுத்தவும், அங்கிருந்த தேவமாதாகோயிலைப் புதுப்பிக்கவும் ஜெஹாங்கீர் அனுமதியளித்தார். குருமாருக்கு அரசாங்க திறைசேரியிலிருந்து சம்பளம்கொடுத்துவரவும் திட்டம்பண்ணினார்.

ஜெஹாங்கீரின் மாளிகையிலேயே கோர்ஸிஎன்ற யேசுசபைக் குருவானவர்ஒருவர் இருந்தார். பிரித்தானியின் தூதுவராகிய சேர் தோமஸ் ரோ என்றபுரொட்டஸ்தாந்தர் மாளிகைக்கு வந்தபோது கோர்ஸிசுவாமியார் அவரைச் சந்திக்கநேர்ந்தகாலையில் அவரைச் சிநேகபான்மையில் வரவேற்றார். "வேதசம்பந்தமாக நம்மிருவருக்குமிடையே பலவேற்றுமைகள் இருந்தபோதிலும், கிறீஸ்துவின் தெய்வத்துவத்தை இருவரும விசுவசிப்பவர்கள்; நம்மிடையே இருக்கக்கூடிய வேற்றுமைகளை இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும்எதிரில் வெளிப்படுத்துவது அழகல்ல" என்று இருவரும் ஒப்புக்கொண்டனர்.

ஜெஹாங்கீரின் நெருங்கியஉறவினருள் நால்வர் அவரதுஅனுமதியுடன் ஞானஸ்நானம்பெற்றனர். ஆனால், தமதுதந்தையைப்போலவே ஜெஹாங்கீரும் கிறீஸ்துவராகாமலே காலங் கழித்து மரணமடைந்தார்.

(ச. வி.)

---

● பரிசுத்தபிதா 12-ம் பத்திநாதபாப்பரசர் அர்ச். லொயலா இஞ்ஞாசியாரில் விசேஷபக்தி பூண்டவர். அர்ச். இஞ்ஞாசியார் எழுதியுள்ள ஞானத்தியானங்களை அவர் ஏறக்குறைய ஒவ்வொருநாளுமே ஆர்வத்துடன் வாசித்துவரும் வழக்கமுடையவர்.

● ஹங்கேரியநாட்டின் பிரதம திருச்சபை அதிகாரியான கருதினால் மின்ட்செண்ரி ஆண்டவர் அந்நாட்டின் தலைப்பட்டணமாகிய புடாபெஸ்ற் நகரிலிருந்து ஏறக்குறைய நான்குமைல் தூரத்திலுள்ள பெல்சோப்பெற்றெனி என்ற சிறிய கிராமத்துக்குச் சமீபமான அல்மாஸிகோட்டையிலே காவலில் வைக்கப்பட்டிருக்கிறாரெனப் பிந்தக்கிடைத்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரிகோணமலைச் சமஷ்டி மகாநாடு

"திரிகோணமலை ஊர்வலத்திட்டம் ஓர் உதவிமந்திரியையே பதவியிழக்கச் செய்துவிட்டது. இது அரசாங்கக்கட்சிக்கு ஆட்டங்கொடுத்து விட்டதென்றால், திரிகோணமலை மகாநாட்டினால் ஏற்படக்கூடிய பலாபலன்களைப்பற்றிக் கூறவேண்டியதில்லை."

—திரு. எஸ். இராசதுரை, மட்டக்களப்பு-எம். பி.

* * *

"திரிகோணமலை ஊர்வலத்தை — நடைபவனியைத் தடைசெய்யுமாறு பிரதமரை வற்புறுத்த இந்தத்தடவை பேராசிரியர் எவ். ஆர். ஜயசூரியா சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவில்லை. இதற்குக் காரணம், எந்த இன்னல்களையும் எதிர்த்துமேற்கொண்டு இந்த நடைபவனியைத் தமிழர் நடத்தியே தீருவார்கள் என்பதை இந்தப் பேராசிரியர் ஜயசூரியா நன்கு அறிவார்."

தமிழரசு மகாநாட்டில் இலங்கைச் சர்வகலாசாலை விரிவுரையாளர், கலாநிதி டக்டர் எஸ். வித்தியானந்தன்

* * *

"சமஷ்டிக்கட்சியின் திரிகோணமலை மகாநாடு ஓர் புஸ்வாணமாகப் போய்விடும்; காரணம், தமிழ்த்தலைவர்களிடையே ஒற்றுமையில்லாமையேயென்று பிரதமர் பண்டாரநாயகா கூறினார். ஆனால், இன்று இம்மகாநாட்டிலே ஆண்களும், பெண்களுமாகத் திரண்டிருக்கும் மாபெருங்கூட்டம் பிரதமரின் கூற்றை முழுமையாகப் பொய்ப்பித்துவிட்டது. தமிழ்த்தலைவர்களிடையே ஒற்றுமையில்லையென்று அவர் கூறினாரே. ஏன் சிங்களவர்கள் ஒற்றுமையாகத்தான் இருக்கிறார்களா? ஆட்சிசெலுத்துகின்ற மக்கள் ஐக்கியமுன்னணியில் ஒற்றுமை நிலவுகிறதா? திரு. செல்வநாயகம்அவர்கள் இலங்கையின் காந்தியாகத் திகழுகின்றார். காந்திஜிக்குஇருந்த அத்தனைகுணங்களும் இவரிலே காணப்படுகின்றன. தமிழரசுக்கட்சி எடுக்கின்ற எந்தநடவடிக்கைக்கும் முஸ்லீம்களின் ஆதாவிருக்கும்."

—ஜனாப் யூசுப் சாஹிப்

* * *

"திரு. கே. எம். பி. இராஜரத்னா பயமுறுத்தியபோதிலும் திரிகோணமலை நடைபவனிபற்றிப் பிரதமர் உறுதியான முடிவைக் கொண்டிருந்ததற்காக நான் அவருக்கு நன்றி செலுத்துகிறேன். திரிகோணமலை ஊர்வலம் இவ்வளவுதூரம் ஓர்மகத்தான வெற்றியாயிருக்குமென்று நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை தமிழர் ஒன்றுபட்டு ஒருதலைவரின்கீழ் உரிமைப்போராட்டத்தை நடத்த முற்படவேண்டும்."

—ஜனாப் ஹூஸைசன், மாத்தளைப் பட்டினசங்க தலைவர்

* * *

"தனிச்சிங்கள சட்டத்தின் அடிப்படை லட்சியம் இலங்கையில் தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் வேருடன் அழித்து, ஒழிப்பதுதான் என்பதில் ஐயமில்லை. இம்முயற்சியை எதிர்த்துச் சாத்வீகமுறையில் நாம் ஒரு போராட்டம் நடத்தினால் வெற்றி பெறுவது நிச்சயம். இதற்குமுன்னால் நமது கோரிக்கையை மறுதரப்பினர் ஆராய்ந்து ஏற்றுக்கொள்ள ஓர் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். ஆகவே, ஓர் கால எல்லையைக் குறிப்பிட்டு அதற்குள் தமிழரசு நிறுவப்படாவிடின் நாம் சாத்வீகப்போராட்டத்தை ஆரம்பிப்போமென்று அரசாங்கத்துக்கு ஓர் இறுதி எச்சரிக்கை விடுப்போம்."

திரு. சி. வன்னியசிங்கம், சமஷ்டிக்கட்சித் தலைவர்

## மகாவலிகங்கையும் கமத்தொழிலும்

சனப்பிரதிநிதிகள்சபையிலே சென்ற வியாழக்கிழமை வரவு-செலவுத்திட்டம் பரிசீலனை செய்யப்பட்டபோது, பருத்தித்துறை எம். பி. திரு. பி. கந்தையா அவர்கள் கூறிய ஆலோசனைவருமாறு: இருபருவகாலங்களிலும் தண்ணீர் பெறக்கூடியதாக மகாவலிகங்கையில் பாய்ந்தோடும் தண்ணீர் நீர்ப்பாசனவேலைகளுக்கென்று இதுவரை பயன்படுத்தப்படவில்லை. இதிலிருந்து நீர்ப்பாசனவசதிகள் பெறுவதானால் இது ஒருபெரிய வேலைத் திட்டமாக இருக்கும். அதனால் பலசிறிய நீர்ப்பாசனதிட்டங்களிலிருந்து கிடைக்கும் தண்ணீரைவிட அதிகமான தண்ணீர் கிடைக்கும். வட மத்தியமாகாணம் முழுவதுக்கும், வடமாகாணத்துக்கும் இதிலிருந்து தண்ணீர்பெறலாம். மகாவலிகங்கைநீரை மத்தியில் சேர்த்து வைக்கும் ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். இதன்மூலம் மாத்தளைக்கு வடக்கேயிருக்கும் நிலம் முழுவதையும் கமத்தொழிலுக்குக் கொண்டுவரமுடியும். இதன்மீது அரசாங்கம் கவனஞ் செலுத்துமானால் கமத்தொழிலில் பெரும்வெற்றி ஏற்படுமெனக் கூறலாம்.

மகாவலிகங்கைநீரை மாத்தளை, தம்பளை, வடமத்திய மாகாணம் இவற்றிற்கூடாக மல்வத்தைஓயாவரை கொண்டுசென்று, பின்னர் மதவாச்சியூடாகக் கனகராயன்ஆற்றுடன் இணைக்கமுடியும். பெருந்தொகைப்பணம் செலவாகுமென்ற பீதியால் அரசாங்கம் இத்திட்டத்தைக் கைவிடக்கூடாது. மாத்தளைக்குவடக்கே இந்நாட்டிலுள்ள மூன்றில் இரண்டுபங்கு வரண்ட பிரதேசபூமியைக் கமத்தொழிலுக்குள்ளாக்குவதானால் அது இத்திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். இத்தகைய நீர்ப்பாசன திட்டத்துக்குத் தற்போது இருந்துவரும் நீர்ப்பாசன காலவாய்களையும், வாவிகளையும் பாவிக்கலாமாதலால் இதற்கு அவ்வளவு பாரதூரமான செலவு ஏற்படாது. ஏற்கனவே இருக்கும் வாவிகளையும், கால்வாய்களையும் பயன்படுத்தி மகாவலிகங்கைநீரை விஸ்தாரமான பிரதேசத்துக்குப் பாய்ச்சலாம். பொருளாதாரத்திற்கும் இது அடிப்படையாயிருக்கும். கரும்பு, பருத்தி ஆகியவற்றைச் செய்கைபண்ண வரண்டபிரதேசப்பகுதி மிகச்சிறந்தது. மகாவலிகங்கையை வடக்கே திருப்புவதன்மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தையும், வகுப்புவாதத்தையும் கட்டுப்படுத்திவிடலாம். யாழ்ப்பாணப்பகுதி கமத்தொழிலுக்கான ஓர்இடம் இங்குள்ளவர்கள் நீர்ப்பாசனத்துக்கென்று கிணற்றுநீரைத்தான் உபயோகித்துவருகிறார்கள். ஆழமான கிணறுகளைத் தோண்டவும், அவற்றிலிருந்து தண்ணீரை இறைக்கவும் ஏற்படுஞ்சிரமத்தை மகாவலிகங்கையை வடக்கே திருப்புவதனால் தடுத்துவிடவும் முடியும்.

## அளம்பில் தபால்

**கால நிலை:** நாளாந்தம் ஒருபாட்டம் சிறுமழை பெய்வதேயல்லாமல் பெலத்தமழை இல்லை. குளிர்காற்று உரமாக வீசிவருகின்றது.

**ஊர்ச்சுகம்:** தடிமன், காய்ச்சல், வாய்வு, வயிற்றுளைவு ஆதியாம்நோய்கள் தலைகாட்டியிருக்கின்றன. இவைகள் சிறுபிள்ளைகளையே அதிகமாகப் பீடிக்கின்றன.

**தென்னைச் செய்கை:** இக்கிராமத்தைச்சுற்றி ஆயிரக்கணக்கான ஏக்கர் முடிக்குரியகாணி தென்னைச்செய்கைக்காக மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதில்இவ்வருடம் நூற்றுக்கணக்கானஏக்கர் காடுவெட்டிக் கொளுத்தித் துப்புரவாக்கப்படுகிறது.

**மாதிரித் தோட்டம்:** வெட்டிவெளியாக்கப்படும் காணிகளுக்கு நடக்கொடுப்பதற்காகக் கிருஷிகப்பகுதியாரால் தேங்காய்கள் நாற்றுப்போடப்பட்டிருப்பதுடன், மாதிரித்தோட்டமொன்றும் அரசினரால் உண்டாக்கப்படுகின்றது.

**கோயில் வேலை:** எங்கள் கட்டளைக்குரவர் வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமியவர்களின் அயரா உழைப்பினால் இங்குள்ள கோடியற்புதரின் கோயிலிலே பலதிருத்தவேலைகள் நடைபெற்றிருக்கின்றன. கப்பலாவுக்குச் சீலிங்அடித்து மைபூசுவித்துப், முகப்பை அழகாகஆமைத்து அதனையும், மற்றும் பிரதான பகுதிகளையும் சீமெந்தால்பூசி வெள்ளையடிப்பித்தும், அடுத்தாரையும், முன் குருசையும் அலங்காரமாகக் கட்டுவித்தும், கோயிலுக்கும், அறைவீட்டுக்கும் சீமெந்து போடுவித்தும், பாடசாலையைப் புதிதாகக்கட்டுவித்தும் சுவாமியவர்கள்ஆற்றியுள்ளபணிகளோ அனந்தமாகும்.

**பிரிவுபசாரம்:** இப்பணிகள் யாவையும்பூர்த்தியாக்கிய வண. சுவாமியவர்கள் இடம் மாற்றமாகிச் செலவதையறிந்த கோவில்கிறீஸ்தவர்கள் அவருக்குச சென்ற 12-8-56 ஞாயிறுவாரம் ஓர் சிறப்பான பிரியாவிடைக் கொண்டாட்டம் நடாத்தினர். அவரை அழகுறச் சிங்காரிக்கப் பட்டிருந்த பாடசாலைக்கு அழைத்துச் சென்று பூமாலைசூட்டிப் பாமாலைசாற்றி வாழ்த்தினர். கோவில் கணக்கப்பிள்ளை திரு. க. அந்தோனிப்பிள்ளை அவர்களின் கனிஷ்ட புதல்வன் அருளானந்தம் செல்வராசாவால் பிரிவுஉபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. பிரதமமூப்பரும், கிராமச்சங்க தலைவரும், பலஐக்கியசங்கங்களின் அக்கிராசனருமாகிய திரு. பி. வி. மிக்கேற்பிள்ளை வைத்தியரும், பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. இ. பாக்கியநாதர் அவர்களும் அவர்ஆற்றிய அளப்பருமசேவைகளை ஒவ்வொன்றாக எடுத்துரைத்து நன்றிகூறினார்கள். பிரியாவிடைநாயகர் அன்புததும்பிய இன்பமொழியில் தமக்குச் செய்யப்பட்டவற்றிற்காக நன்றிசெலுத்தி, நல்லுரைபகர்ந்து, நன்மதியுரைத்துச் சகலரையும் ஆசீர்வதித்தார். சுற்றில், சிற்றுண்டி, லகுபான உபசாரணையுடனும், மதியப்போசனத்துடனும் கொண்டாட்டம் இனிதேசம்பூரணமாயிற்று.

**மெய்விவாகம்:** இக்கிராமத்தில் உதித்த திரு. ஏ சூசைப்பிள்ளை என்பவரின் புதல்வரான செல்வன் அந்தோனிப்பிள்ளைக்கும், விதானைமார் திரு. பாவிலுப்பிள்ளை, திரு.பிறஞ்சீஸ்பிள்ளை ஆகியவர்களின் பூட்டியும், கோவில் கணக்கப்பிள்ளையாயிருந்த திரு. பாவிலுப்பிள்ளையின் கனிஷ்ட புதல்வியுமாகிய செல்வி இரத்தினம மரியானுப்பிள்ளைக்கும் சென்ற 18-8-56 சனிக்கிழமை அர்ச். அந்தோனியார் கோயிலில் வண. கட்டளைக்குரவரால் மெய்விவாகத் திருச்சடங்கு நிறைவேறியது. தம்பதிகள் பதினாறும்பெற்றுப் பல்லாண்டுவாழ எல்லாம்வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக.

— நிருபர்

## மீதியாயிருந்த ...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தானேயொழியத் தகுந்தபதில் கூறவில்லை.

காரும் வீட்டை அண்மியது. காரிலிருந்து தம்பதிகள்இருவரும் இறங்கினதும் வசந்தா நாயகனைநோக்கி, "இன்று நீங்கள் அதிகமாய்ச் செலவு செய்திருக்கிறீர்கள்; காருக்குமாத்திரம் வாடகை நான்கொடுக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே வீட்டினுள்நுழைந்தாள். நுழைந்தவள் கால்மணிநேரமாக வெளிவரக் காணாத ஆனந்தராசன் கார்க்காரனுக்கு வாடகைப்பணத்தைக் கொடுத்தனுப்பிவிட்டு, உள்ளே சென்றான். சென்றவன் அங்கு கண்ட காட்சிஎன்ன? வசந்தா தன் பெட்டியிலுள்ள புடவைகளையும், மற்றும்சாமான்களையும் கீழே எடுத்துப்போட்டு, அங்குமிங்கும் எதையோ தேடிக்கொண்டிருந்தாள். அவள்முகத்தில் எள்ளும்கொள்ளும் வெடிக்குமாப்போல் கோபத்தணல் வீசியது. ஆனந்தராசனைக் கண்டதும் "எங்கேநான் பெட்டியில்வைத்திருந்த 100 ரூபா நோட்டுகளும்? எடுத்தால் நீங்கள்தான் எடுத்திருக்க வேண்டும்; வேறுயார் இங்குவந்து எடுக்கப்போகிறார்கள்?" என்று கத்தினாள்.

ஆனந்தராசன் தன்தப்பிதத்தை ஒப்புக்கொண்டு, "பார்த்தாயாடி இப்பொழுது பணத்தின்அருமையை" என்று சொல்லிக்கொண்டே தன்கையில் மீதியாயிருந்த நாலரை ரூபாவையும் கொடுத்தான். பணத்தின்அருமையை அறிந்த வசந்தா இப்பொழுது சிக்கனமாய்ச் செலவிட்டுத் தன்பிரேமபதியோடு சொகுசாக வாழ்ந்துவருகிறாள்.

### யாழ்ப்பாணம்

### அர்ச். ஆரோக்கியநாதர் திருநாள்

இத்திருநாள் கொண்டாட்டம் நிகழும் ஆவணிமாதம் 16-ந் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 27-ந் திகதி திங்கட்கிழமை முடிவாகும்.

**J. M. குஷரோன், O. M. I.**
கட்டளைக்குரவர்

**"வெல்மார்" "புரேட்வூட்" பியானோக்கள்**

இன்னும்

**பேவி ஓர்கன்கள், நிலைமாற்றும் நீட் ஓர்கன்களும் கிடைக்கும்.**

**வெல்மார் பியானோ & இம்பீறியல் ஓர்கன் ஏஜென்ஸி,**

**171, சென் ஜேம்ஸ்வீதி, முகத்துவாரம், கொழும்பு 15.**

தந்திவிலாசம்: **"பெற்றி புளுவர்" கொழும்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தூய கன்னிமை"

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அருவருத்துத் தள்ளிவிட நம்மைத் தூண்டுகின்றது: "சரீரத்தில் கற்புடையவன் அகங்காரமற்றவனுக இருப்பானுக. ஏனெனில், கற்பெனும் கொடைக்குக் காரணமாய் இருப்பவர் வேருெருவர்என்று அவன் நன்கு அறியக்கடவான்" (Ad Corinthios 38, 2). கன்னிமையின் பாதுகாப்புக்குக் கிறிஸ்தவ தாழ்ச்சி எத்துணை அவசியமென்று அர்ச். அகுஸ்தீனுரைவிட வேறெவரும் அதிதுலக்கமாகவிளக்கியதில்லை: "நித்திய இச்சையடக்கம் — விசேஷமாய்க் கன்னிமை—தேவபக்தர்களில் அதிசிறந்த நற்பொருளாய் இருப்பதால், அது அகந்தையால் பழுதுருதபடி அதிவிழிப்புடன் பாதுகாக்கப்படல் வேண்டும்........ இக்கொடையின் பெருமையை நான் எவ்வளவு துலக்கமாய் உணருகிறேனே, அவ்வளவிற்கு அது அகந்தையால் கொள்ளையடிக்கப்படுமோவென்று உண்மையாகவே அஞ்சுகிறேன். ஆகையால், கன்னிமையைப் பாதுகாப்பது அன்பே உருவான தேவனே அன்றி வேறெவரும் இல்லை. ஆகையால், தேவசிநேகமே கன்னிமையின் பாதுகாவலாக இருக்கின்றது; தாழ்ச்சியே இப்பாதுகாவலின் இருப்பிடமாம்" (De Sancta Virginitate C C. 33, 51). [தொடரும்]

## மரண அறிக்கை

பலவருடங்களாக ஆசிரியராகக் கடமையாற்றித் தற்போது ஓய்வுபெற்றிருக்கும் திரு.சின்னையா மாசில்லாமணி ஆசிரியர் அவர்களுடைய கனிஷ்ட புதல்வி செல்வி மேரி மெக்டலின் பூமணி சிலகாலங்களாக நோய்வாய்ப்பட்டிருந்து, அந்திய தேவதிரவிய அனுமானங்கள்யாவும் குறைவறப்பெற்றுச் சென்ற 5-ந்திகதி ஞாயிறுவாரம் பிற்பகல் 3-30மணிவரையில் மரணத்திரையில மறைந்தார் என்னும் துக்கசெய்தியை மிகுந்தவியாகுலத்துடன் தெரிந்துகொண்டோம். இறக்கும்போது இவளுக்கு வயது 27. மறுநாட் திங்கட்கிழமைகாலை 6 மணி வரையில் கொழும்புத்துறை சஞ்சூசையப்பர் தேவாலயத்தில் தாபனஅதிபர் வண. எம். ஜே. மரியாம்பிள்ளைச் சுவாமியவர்களால் துக்கப்பாடற்பூசை நிறைவேற்றப்பட்டது. பிற்பகல 5 மணிவரையில் பலஇடங்களாலும்வந்து திரண்ட உற்ருர், உறவினர், சிநேகிதர்சமுகத்திலே வண. எம். ஜே. மரியாம்பிள்ளைச்சுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடிச் செல்லப் பிரேதமானது சேமக்காலைகொண்டுசென்று பூமதானம் செய்யப்பெற்றது. இதைக் கண்ணுறும் யாவரும் இவளின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளும்படி பரிவாய்க் கேட்டுக்கொள்ளுகின்ரேம். இவளை இழந்து துன்புறும் தந்தை, தாய், சகோதரர், சகோதரிகளுடன் நாமும் அனுதாபப்படுகின்ரேம்.

R. I. P.

# கடவுளை எதிர்க்கும் கம்யூனிஸம்

கம்யூனிஸம் என அறியப்படுகின்ற பொதுஉடைமைக் கொள்கையின் ஸ்தாபகனுன காள்ஸ் மாக்ஸ் என்பவன் 1869-ம்ஆண்டில்தானே சமயம்என்பதைத் துடைத்துத்தள்ள வேண்டுமெனத் தீர்மானித்துவிட்டான். கம்யூனிஸ்தகொள்கை நிலைநாட்டப்பட வேண்டுமென்ருல் — அதுவெற்றிபெற வேண்டுமென்ருல், தான் சமயதலைவர்களை எதிர்த்துப் போராடவேண்டுமென்று தனதுநண்பன் எஞ்செல்ஸ் என்பவனுக்குக் காள்ஸ் மாக்ஸ் அப்போது எழுதியிருந்தான்.

காள்ஸ்மாக்ஸ் சமயத்தின் மட்டில் கொண்டிருந்த அபிப்பிராயத்தைப் பற்றி— வெளியிட்டுள்ள அபிப்பிராயத்தைப்பற்றிக் கேட்டிருக்கிறீர்கள். அதாவது, "சமயம் மக்களின் அபின்" என்பதே. கூழுக்குமாங்காய் தோற்காது என்ருற்போல, ருஷியாவில் கம்யூனிஸ்தத்தை அடிகோலிய லெனின் என்பான் சமயத்தை "இளக்கமான வொட்காப்பானம்" என்று கூறியுள்ளான்.

மாக்ஸும், லெனினும் பொய்ச்சமயங்களைப்பற்றிப் பேசவில்லையென்பதை நாம் மனதில்இருத்திக் கொள்ளவேண்டும். மனிதனிலும் உயர்ந்த ஒருவஸ்து உண்டு; மாணத்துக்குப்பின் மறுமைச் சீவியம் உண்டுஎன்ற ஒருகொள்கையை அவர்கள்முற்ருக நிராகரித்துள்ளார்கள் என்பதை நாம் உணரவேண்டும்.

கம்யூனிஸ்தஎதிர்ப்பு எந்தச்சமயத்தையும், நேரடியாகத் தாக்குவதில்லை. லெனின் சமயப்போர்களை ஒருபோதும் ஆதரிக்கவில்லை. ஏனெனில், அவ்வித தாக்குதல்கள் சமயத்துக்குப் புத்துயிர் அளிப்பதற்குச் சிறந்தசாதனங்களாகுமெனக் கூறியுள்ளான். ஆனுல், சமய கொள்கைகளையும், சமயத்தலைவர்களையும் கேலிசெய்வதினுல் சமயத்திற்கு நட்டம்ஏற்படுத்தக் கூடுமென நம்பியிருந்தான்.

மாக்ஸ்என்பவன் எல்லாச்சமயங்களையும் அருவருத்துத்தள்ளினுன். ஏனெனில், கடவுள்ஒருவர் உண்டென்ற கொள்கையை அவன் அங்கீகரிக்கவில்லை. கடவுள் இல்லைஎன்று ·அவனுல் சாதிக்கவும்முடியவில்லை. மனிதவர்க்கம் ஓர்மேலானசிருட்டியில் ஏன் நம்பிக்கை கொண்டுள்ளதென்றும், மாணத்துக்குப்பின் ஓர் மறுமைச்சீவியம் உண்டென ஏன் அவர்கள் பொதுவாக ஏற்றுக்கொண்டார்களென்றும் மாக்ஸ்ஒருபோதும் வினவியதேகிடையாது. கடவுள் இல்லையென்று அர்த்தசாமற்றவகையாய்த் தீர்ப்புக்கூறியுள்ளான்.

தங்கள் தளபதியின் — ஸ்தாபகனின் சாதனையைப்பின்பற்றித் தற்காலத்தில் கம்யூனிஸ்தர்கள் உலகத்திலிருந்து கடவுளைப் பிரித்துவிட்டிருக்கிருர்கள். கடவுளைக் கனவிலும்காணச் சகியாதிருக்கிருர்கள். "மனிதன் சர்வேசுரனில் தங்கியிருக்கிருனெனக் கிறீஸ்துவர்கள் நம்புகிருர்கள். எனவே, கடவுளை அவர்களிடமிருந்து எடுத்துவிடுவோமாகில், மனிதன் எல்லாவற்றிற்கும் மேல்ஆவான்" என்றகொள்கையைப் புகுத்தமுடியுமென எண்ணுகிருர்கள் கம்யூனிஸ்தகட்சியாளர்.

கடவுள் இல்லையென்ற கொள்கையையுடைய ஒருஉலகத்தில் ஒருவராவது

அதிஉன்னதஸ்தானத்தை வகிக்கமுடியாது என்பதைக் கம்யூனிஸ்தர்கள் மறந்துவிடுகிருர்கள். ஏனெனில், கடவுள்இல்லையோ எதற்கும்மதிப்பும் இல்லை. விலையும் இல்லை. எப்பொருளுக்கும் கருத்தும், காத்திரமும் கொடுப்பவர் கடவுளே. எல்லோரும் சமம் என்கிருர்கள் கம்யூனிஸ்தர்கள். ஓர்அளவில் இது மெய்தான். ஆனுல், இந்தச் சமம் ஒன்றுமில்லாமையைக் குறிக்கின்றதேதவிர மற்றப்படியல்ல. அவர்களுடையஉலகம் அர்த்தசாரமற்றிருப்பதால் எல்லாம்மதிப்போ, விலையோ இல்லாதிருக்கின்றன.

எப்படியாயினும் சமயத்தையோ, கடவுளையோ கம்யூனிஸ்தர் நிராகரிக்க முடியாது. ஆதலால், கம்யூனிஸத்தின் பாரியஎதிரியாகிய சமயத்தை அவர்கள் வேரோடுந்தூரோடும் களையக் கங்கணங்கட்டுகிருர்கள். சிற்சில வேளைகளில் சமயத்தை ஆதரிப்பதாக அவர்கள்நடித்தாலும், சமயத்தைக் குழிதோண்டிப் புதைப்பதே அவர்களின் ஆவல்என்பதை நாம்மறந்துவிடல்ஆகாது.

கடவுள்ஒருவர் இருக்கிருர் என்ற கொள்கையோடு கம்யூனிஸ்தர் ஏன் வாழ்தல்கூடாது? வாழ்ந்தால் கம்யூனிஸம் உலகத்தையே ஓர்பெரும் பசுமபுற்தரையாக மாற்றிவிடக்கூடும். அதிலே மனிதன் உண்டு, உடுத்து, களித்து உல்லாசமாக வாழமுடியும். அம்மட்டுந்தான். ஆனுல், இவற்றிலும் மேலான தேவைகள் கடவுளும், சமயமும் மனிதனுக்கு உண்டென்பதை உணர்த்துமன்ரே. மாணத்துக்குப்பின் மறுமைச்சீவியம் உண்டென்று சமயம் மனிதனுக்குப் படிப்பிக்கின்றது. இந்த உலகத்தில் பரிபூரணசந்தோஷத்தை மனிதன்ஒருபோதும் அனுபவிக்க முடியாதெனப் போதிக்கின்றது. மனிதன் சுயாதீனம்உள்ள பிராணிஎன்று சமயம்கற்பிக்கிறது. சுயாதீனம் உள்ள மனிதன்மாத்திரம் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கமுடியும். ஆகவே, கம்யூனிஸ்தர்களின் பெரியவிரோதி சமயம் என்பதை எவராலும்மறுக்க முடியவே முடியாது. இந்தஉண்மையைக் காள்ஸ் மாக்ஸ் நூருண்டுகளுக்கு முன்னமே நன்குஉணர்ந்து கொண்டான். இன்று சமயகுரோதம்செய்யும் கம்யூனிஸ்தரும் இந்தக்கொள்கையைக் கடைப்பிடித்து இந்தஉலகம் தங்களுக்கும், கடவுளுக்கும் போதிய இடமாகாதெனக் கர்ச்சிக்கிருர்கள். பொதுஉடைமை ஒழிக! நிரீச்சுரவாத சமதர்மம் அழிக!! ஈச்சுரவாதம் எங்கும்பரவுக !!!

---

அர்ச். இஞ்ஞாசியார்பிறந்த சிறுகிராமமாகிய லொயலாவிலே கருதினல் சிறி ஆண்டவரையும், ஜெனறல் பிருங்கோஅவர்களையும் தலைமையாகக் கொண்டு ஆயிரக்கணக்கிலே கூடியிருந்த யாத்திரிகர்களுக்குப் பரிசுத்த பாப்பாசர் வானெலிமூலம்பேசி இஞ்ஞாசியாரின் புனிதவருடத்தைச் சென்ற ஆடிமாதம் 31-ந்திகதியன்று முடித்துவிடலாயினர்.

---

## GOVERNMENT TENDERS

### Jaffna Kachcheri

N 2276—Tenders will be received by the G. A., Jaffna at the Jaffna Kachcheri up to 12 noon on 7-9-56 for the right to sell tickets on the Kayts—Delft Motor Launch Service 1956/57 to commence on 1-10-56 and ending on 30-9-57. For particulars see Govt. Gazette, 24-8-56.

---



## முகமாலை
## அர்ச். பிலோமினம்மாள் திருநாள்

- ஆவணி 23-ந்திகதி மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரம்.
- ஆவணி 24-ம் திகதி காலை 7 மணிக்கு பாடற்பூசையும் சுற்றுப்பிரகாரமும்.
- 23-ந்திகதி இரவு 12—1 மணி வரை திருமணித்தியாலம் நடைபெறும்.
- 12-ந்திகதி நோவனைகள் ஆரம்பமாகின்றன.
- 22, 23, 24, 25-ம் திகதிகளில் றெயின்வண்டி கோவிலுக்கு முன்பாகத் தரிக்கும்.

Fr. J. A. Francis, O. M. I.
Nallur, Jaffna.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

திருஇருதயநாதர், பரிசுத்த சதாசகாய மாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். றீத்தம்மாள், அர்ச். திரேசம்மாள் முதலியோரிடம் நான்கேட்டுக்கொண்ட வேண்டுதல்கள்யாவும் கிடைக்கப்பெற்றதற்கு நன்றியறிதலாக இதனைப் பிரசுரிக்கிறேன். இவர்கள்நாமம் என்றென்றும் புகழப்படக் கடவது.

C. R. S.

* * *

திருஇருதயநாதரின் இரக்கத்தினுலும், பரிசுத்த செபமாலைமாதாவின் சலுகையாலும், அர்ச். திரேசம்மாள், அர்ச். அந்தோனியார், அர்ச் சூசையப்பர் இவர்களது வேண்டுதலினுலும் நான்நேர்த்திசெய்து இரந்து மன்ருடிக்கேட்ட நன்மை அனுகூலமானது. இவர்களின் நாமம் எங்கும் புகழப்படுவதாக.

M. M. K.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 23-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புளித வீரர்



## "உப்பிட்டவரை ..."

ஒருநாள் என் தங்கை லீலா காலைச் சிற்றுண்டிக்கு உப்புமாசெய்து வைத்திருந்தாள். அப்பப்பா! அதில்ஒரே உப்பு. "என்ன லீலா, உப்புமாவில் ஒரேஉப்பாக இருக்கிறதே!" என்றேன் நான். "அண்ணா, இதற்குப் பெயரே உப்புமா அல்லவா? இதில் உப்பில்லாமல் சர்க்கரையா இருக்கும்!" என்றாள் மிகத்துணிவாக.

"ஆமாம் லீலா, உப்புமாத்திரமல்ல இது வேகாமல் மாவாகவும்தானிருக்கிறது. பெயர் சரிதான்" என்றேன் நான் சற்றுத் துடுக்காக.

"அண்ணா, உப்பிட்டவரை உள்ளளவும்நினை என்ற பழமொழி உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் என்னை நினைத்துக் கொள்வதற்காகத்தான் உப்புமாவில் அதிக உப்புப்போட்டேன்!" என்று கூறி என்வாயை அடைத்துவிட்டாள் என்தங்கை.

"உப்பில்லாப் பண்டத்தைக் குப்பையிலே போடு" என்று சொன்ன அனுபவசாலி, உப்பு அதிகமாயுள்ள பண்டத்தை என்ன செய்வதென்று சொல்லாததனால் வேறுவழியின்றி உப்புமாவை வயிற்றில் போட்டுக்கொண்டேன்.

உப்பை எவ்வளவு உயரியஉவமையில் யேசுநாதர் உவமித்துக் காட்டுகிறார். பாருங்கள்: "நீங்கள் உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதனால் இனி அது சாரமாக்கப்படும்? வெளியே எறியப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது."

ஆம்; உலகத்தில் நாம் மிகவும் பயனுள்ள மக்களாயிருக்க வேண்டுமென்பதே யேசுநாதர் காட்டிய உப்புஉவமையின் உயரியநீதி. நாம் உப்பைப்போல் உலகத்தில் உபயோகமுள்ளவர்களாயிருக்க எவ்வளவோ இன்னல்களைச் சகிக்கத்தான் வேண்டும். உப்புநீருக்குப் பயந்துகொண்டிருந்தால் எங்ஙனம் விலை உயர்ந்த முத்துஎடுக்கமுடியும்?

உப்பு நமதுஉடலுக்கு இன்றியமையாதது. உப்புக் குறைந்துபோனாலும், அதிகமானாலும் நமக்கு நோய்வந்துவிடும் என்பது வைத்தியர்கள் ஒப்புக்கொண்ட உண்மை. "ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்துஉண்மைபேசி உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமுதமாகும்" என்ற அமுதமொழி—உளங்கனிந்த மொழி உப்பின் மேன்மையையும், அதன் பெருமையையும் ஓரளவு உணர்த்திக் காட்டுகிறது. உப்பு என்பதற்கு 'இனிமை' எனும் பொருள் உள்ளது. கூடலிற் தோன்றும் இனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையை 'உப்பு என்று உரைக்கிருர் வள்ளுவப்பெருந்தகை.

"ஊடிப்பெறுகுவங் கொல்லோ
நுதல் வெயர்ப்பக்
கூடலிற் றேன்றிய வுப்பு."

பாலுக்குச்சர்க்கரை இல்லையென்று கவலைப்படுகிருனே அந்தப்பணக்காரன். அவன் கவலையைப்பார்த்து ஏளனப்புன்னகை புரிகிறேன் நான். ஆனல், கூழுக்கு உப்பு இல்லையென்று கவலையுறுகிருனே என் சகோதர மனிதன். அவனது தீனக்குரலைக்கேட்டு உளங்கனிந்து கண்ணீர் விடுகிறேன். நான் பணக்காரனது தங்கப் பேலாவில் சர்க்கரையாக இருக்க விரும்பவில்லை. ஆனல், ஏழையின் மட்கலயத்திலே என்றும் உப்பாக இருக்க ஆசிக்கிறேன்.

(கலைமலர்)

## அழியாது

புகழும் பெயரும் அழிந்துவிடும்
புண்ணியம் என்றும் அழியாது

பெருகும் செல்வம் அழிவதுபோல்
பெரியோர் வாக்கு அழியாது

கடலும் மலையும் அழிவுபெறும்
கல்விச் செல்வம் அழியாது

உலகம் நிச்சயம் அழிந்தே போம்
உண்மை வாழும், அழியாது

எல்லாம் அழிந்து ஒழிந்தாலும்
இறைவன் அன்போ அழியாது

# உண்மை பேசிய திருடன்

இந்தியாவிலே பாடலிபுரம் என்று ஒருநகரம் உண்டு. அங்கே ஒருஏழை இருந்தான். அவனுக்குத் தாய், தந்தை யார்யாரும் இல்லை. இளம்வயதிலேயே அவனை நல்வழிப்படுத்துவாரற்று அவன் எல்லாவிதமான தீயசெயல்களையும் கற்றுக்கொண்டான். ஊரவர்கள் அவனைக்கண்டால் அவனை வெறுத்துத் தள்ளுவர். ஒருநாள் ஒருதுறவி அவனைக்கண்டு இரக்கமுடையவராய் அவனுக்கு நற்புத்திகூற எண்ணினர். துறவி அவனை நோக்கி, "நீ செய்யும் பாவங்களில் ஒன்றையாவது விட்டுவிடக்கூடாதா?" என்றுர். அவனும் அவரின் அன்புக் கேள்விக்கு இசைந்து, "யான் எதனைவிட்டுவிட விரும்புகிறீர்" என்றுன். முனிவர், "நீ இன்றுமுதல்பொய் சொல்லக்கூடாது" என்றுர். அவனும் அவர் ஆணைக்கடங்கி அன்று முதல் ஏனைய பாவங்களைச் செய்தானுயினும் பொய்பேசுதலைக் கைவிட்டுவிட்டான். ஒருநாள் இரவு அவன் அந்நகரத்து அரன்மனையில் திருடச்சென்றுன். மாறுவேடத்தில் நகரபரிசோதனைக்குப் புறப்பட்ட அந்நகரத்து அரசன் அத்திருடனைக்கண்டு "நீயார்? இங்கு எதற்காகவந்தாய்?" என்றுன். அதற்குத் திருடன் "யான் இவ்வரன்மனையில் திருடவந்தேன்" என உண்மையைக் கூறினன். அதைக் கேட்ட அரசன் மேலும் அவன் இயல்பை அறிய விரும்பியவனுய், "நானும் திருடத்தான் வந்தேன். அரன்மனைத்திறவுகோல்கள் என்னிடமுண்டு. நீ அவற்றைக்கொண்டு சென்று திருடிவந்து எனக்குப்பாதி கொடு" என்றுன். அவ்வாறு திறவு கோல்களைப்பெற்றுச்சென்ற திருடன்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "என்வீடு செபவீடு..."

லூக்காஸ் 20-ம்அதிகாரம், 45-ம், 46-ம் வசனம் (லூக். 20 : 45—46) யேசுநாதர் தேவாலயத்தில் பிரவேசித்து, அதிலே விற்கிறவர்களையும் வாங்குகிறவர்களையும் வெளியே துரத்தத் தொடங்கி என்வீடு செபவீடு என்று எழுதியிருக்கிறதே ; நீங்களோ அதைக்கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்.

யேசுவின் இந்த வேதவாக்கியத்தை நாம் ஆழமாகச் சிந்திப்பது மிகவும் பயனுள்ளதாகும். "என்வீடு செபவீடு......" என்பதை நாம் சிந்திபபோமானால் யேசுநாதர் தமது சகலவல்லமைகளோடும் எழுந்தருளியிருக்கும் சகலகோவில்களும் யேசுவின் செபவீடாகும். யேசுநாதர்மனுஷாவதாரம் எடுத்துப் பெத்தலகேம் எனும் சிற்றூரில் ஒருமாட்டுத் தொழுவத்தில் பிறந்துவிட்டார். மூவிராசாக்கள் ஓர் அதிசயமான நட்சேத்திரத்தைக் கண்டு யேசுவின் பிறப்பை அறிந்துவிட்டார்கள். அப்புதிய நட்சேத்திரம் யேசுநாதர் பிறந்த இடம்வரை மூவிராசாக்களுக்கு வழி காட்டிக் கொண்டு வருகிறது. யேசு பிறந்திருக்கும் மாட்டுக் கொட்டில் இருக்கும் இடத்தில் நட்சேத்திரம் வந்துநின்றுவிட்டது. திவ்வியபாலகனை மூவிராசாக்கள் சென்று ஆராதித்துத் தம்காணிக்கைகளைச் செலுத்துகிறார்கள். மூவிராசாக்களுக்குவழி காட்டிய புதியநட்சேத்திரம்போல யேசுவின் செபவீட்டில் ஒரு நட்சேத்திரம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அதுதான் தேவநற்கருணைக்குமுன் வைக்கப்பட்டிருக்கும்விளக்கு. எமக்குஅப்புதிய நட்சேத்திரம் போல் காட்சியளிக்கும்விளக்கு, யேசுதமது சகலவல்லமைகளோடும் இங்கு எழுந்தருளியிருக்கிறார்; அவரைச்சென்று ஆராதியுங்கள் என்று எமக்கு ஓயாது சொல்லிக்கொண்டிருக்கிறதுபோல் காட்சியளிக்கிறது.

யேசுவின் செபவீட்டை எம்மில் அநேகர் கள்ளர் குகையாக்குகிறோம். முன்னர் யேசுநாதர் தேவாலயத்தில் விற்கிறவர்கள் வாங்குகிறவர்களை வெளியே துரத்தினார். நாம் இப்போது யேசுவின் செபவீட்டில் உண்மையான விற்பனவு செய்யாவிட்டாலும் அதிலும்பார்க்க எவ்வளவு துட்டத்தனங்களைச் செய்கிறோம். அநாசாரமாய் நடக்கிறோம். கோவிலில் பராக்குப் பார்க்கிறோம். நல்ல உடுப்புகள் உடுத்து வருபவர்களைப்பார்த்து மனம் புழுங்குகிறோம். அவர்கள்மேல் பொறுமை கொள்ளுகிறோம். கோவிலுக்குள்ளே இருந்து பிறத்தியாரைப்பற்றிக் கோள், ஆவலாதி, அவதூறு பேசுகிறோம். காய்மகாரப்படுகிறோம். பிறத்தியாரின் நல்ல செல்வநிலையைக்கண்டு எரிச்சல்படுகிறோம்.

இன்னும் நாம் எவ்வளவோ பாரதூரமான விடயங்களைச் செய்கிறோம். பிறர்மேல் இச்சைகொள்ளுகிறோம். எம்மைப் பிறர் பார்க்கவேண்டுமென்ற நோக்கத்துடன் எம்மை அலங்கரித்துக் கொள்ளுகிறோம். கெட்டநினைவுகளுக்கு நாம் இடம் கொடுக்கிறோம். செபவேளைகளில் நாம் எம்முடைய மனதை அலையவிட்டு விடுகிறோம். மனம் பலபல பகற்கனவுகளில் சஞ்சரித்துச் சுயநிலை பெறாது அதிகநேரம் வேறுசிந்தனைகளில் சென்று விடுகிறது.

மனத்தை ஒருவழிப்படுத்தாது நாம் பல வழிகளில் செலுத்திப் பாவத்துக்குரிய சார்புகளில் விட்டுவிடுகிறோம்.

ஆ! மனமே!! "என்வீடு செபவீடு..." எனஎழுதப்பட்டிருக்கும் இந்த இடத்திலா இவ்வளவு அக்கிரமங்களைச் செய்வது. யேசுவிற்கு மகிமைவரக்கூடிய நற்கிருத்தியங்கள் நடைபெறும் அவ்வேளைகளில் எம்மனத்தைப் பலப்பல சிந்தனைகளில் ஈடுபடவிடலாமா? அதோ! பூசைப்பலி தொடங்கிவிட்டது. முடிவுவரை அப்பூசையில் உன்சிந்தனைமுழுவதும் செல்லட்டும். தேவநற்கருணை ஆசீர்வாதம், செபமாலை, பிரார்த்தனை, சிலுவைப்பாதை, இன்னும் கோவிலில் நடைபெறும் திருச்சடங்குகள் வேளைகளில் உன்சிந்தனை முழுவதும் அவைகளில் ஈடுபடுத்துவாயாக. கத்தோலிக்க கிறீஸ்தவமக்களாகிய நாம் யேசுவின் செபவீட்டைக் கள்ளர் குகையாக்கக்கூடாது. ஒரு அர்ச்சியசிஷ்டர் கோவிலுக்குள் வரும்போது சொல்லுவார்: "நான் தேவனை ஆராதிக்கப்போகிறேன். துஷ்டப் பசாசே அகன்றுபோ" எனக்கூறித் தேவாலயத்துள் சென்று செபம் சொல்லுவார். வெளியிடங்கள் எமக்குப் பலசோதனைகளை வருவிக்கக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களாக இருக்கக்கூடும். கோவிலில் நாம் சென்றவுடன் கடவுளின் சந்நிதானத்துக்கு நாம் வந்துவிட்டோம் என்ற புத்துணர்வு எம்மை ஆட்கொண்டு எம்முடைய சிந்தனை, சொல்,செயல்யாவும் யேசுவின செபவீட்டுக்கு ஏற்பக் கடமைகள் செய்வதில் ஈடுபட வேண்டும். தேவனின் பக்கமாக எம்முடைய சகலவல்லமைகளையும் உயர்த்தி அவரின் புகழைப்பாடி அவரைத் தோத்திரிக்க வேண்டும். பரலோகத்தில் தேவனைச் சம்மன சுகள் சூழ்ந்துஓயாது "பரிசுத்தர்" "பரிசுத்தர்" என வாழ்த்திக் கொண்டு இருப்பது போன்று நாமும் எம்சகலவல்லமையையும் கொண்டு யேசுவின் செபவீட்டில் செபவேளைகளில் யேசுவை வாழ்த்திப் புகழ்ந்து ஆராதிப்போமாக. யேசுவின் செபவீட்டைச் செபவீடாகப் பாவிப்போமாக.

## உண்மை பேசிய திருடன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசனின் ஆபரணப் பேழையைத் திறந்து இரண்டு இரத்தினங்களை எடுத்துக்கொண்டுவந்து, "அங்கே மூன்று இருந்தன. அவற்றில் எனக்கொன்றும் உனக்கொன்றும்ஆக, இரண்டை எடுத்துவந்தேன். இதோ உன்பங்கைப்பெற்றுக்கொள்" என்று ஒரு இரத்தினத்தை அரசனிடம் கொடுத்தான். அரசன் திருடனுடைய ஊரையும் பேரையும் கேட்டறிந்து கொண்டான். மறுநாள் அரன்மனையில் களவு நிகழ்ந்தசெய்திபரவி அரசனுக்கும் அறிவிக்கப்பட்டது. யாதும் அறியாதவன்போல் அரசனும் தன்மந்திரியை அழைத்து, எவை களவு போயின என்று அறிந்துவருமாறுஅனுப்பினன். மந்திரியும் உள்ளே சென்று களவு போகாத இரத்தினத்தைக் களவாக மறைத்துக்கொண்டு "எல்லா இரத்தினங்களும் களவுபோயின" என்ருன். உடனே அரசன் திருடனை அழைப்பித்து அவன்மூலம் களவைஎல்லாருமறியச் செய்தான். மந்திரி திருட்டுக் குற்றத்திற்காக சிறைசென்ருன். திருடன் உண்மை கூறியபடியால் மதிக்கப்பட்டான்.

ம. வேதநாயகம்
அர்ச். திரேசாறோ. க. பாடசாலை,
கிளிநொச்சி.

## அண்ணு சொல்வது :

தம்பி தங்கைமார்களே !

அன்ருெருநாள் நான் என்னுடைய சைக்கிளில் பயணம் போகும் பொழுது ஒரு விசேஷத்தைக் கண்டேன். நான் பயணஞ் செய்துகொண்டிருந்த நேரம் இரவு ஏழுமணி இருக்கும். எதிர்த் திசையிலிருந்து அநேக கார்கள், லொறிகள் வந்துகொண்டிருந்தன. என்னுடைய சைக்கிளில் ஒரு மங்கலானவெளிச்சம் மாத்திரம் இருந்தது. எதிரே வந்த மோட்டர் இரதங்களிலிருந்து கண்ணைப்பறிக்கும் வெளிச்சங்கள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. கிட்ட நெருங்கிய போது அவை என்கண்களை மங்கச் செய்தன. அப்படிப்பட்ட இரதங்கள் வரும் பொழுது நான் கண்தெரியாமல்எந்தப் பள்ளத்துள் இறங்கி விடுகிறேனே, எந்த மரத்தில் மோதுகிறேனே, அல்லது எவரைத்தட்டி விழுத்திவிடுகிறேனே என்று பயந்தேன்.

சற்று நேரத்திற்குப்பின் வேருெரு கார்வந்தது. அதன் வெளிச்சம் கண்ணைப்பறித்தது. ஆனல், கிட்ட வந்ததும், காரின் வெளிச்சம் சற்று மங்கியது. நான் இலகுவாகப் பார்க்கக் கூடியதாய் இருந்தது. அந்தக் கார்ச்சாரதியை நான் மனதாரப் போற்றினேன். அவன் தான்மாத்திரம் அல்ல, பிறரும் வீதியில் நடமாடுகிருர்கள் ; அவர்களைப்பற்றியும் அக்கறைகொள்ள வேணுமென்ற சிந்தனை நிறைந்தவன்.

இவ்வுலகத்தில் நாம் மாத்திரமல்ல, பிறரும் வாழவேண்டும் என்ற கவலையுடன் சீவிப்பவர்கள் அநேகர் இருந்தால் இவ்வுலகம் நன்மை அடையும்.

அண்ணு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org